ஸம்புடம் 1] OCTOBER 1933 [ஸஞ்சிகை 4

ஸ்ரீ

வைதிக மத தீபிகை

ஸ்ரீமுக ௵

புரட்டாசி ௴

PUBLISHED BY

SRI SADVIDYA SABHA

SAIDAPET, MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸர்வமத வினா விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 91
2. தர்மசாஸ்த்ரம்:—[சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர்] ... 99
3. சக்ரவர்த்தி அரசியல்:—[பி. ஆர். திருமலை ஐயங்கார். ... 102
4. ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்:—[ஸ்ரீ உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்] ... 105
5. ஸ்ரீ ராமமூர்த்தியின் குண விசேஷங்கள்:—[ப்ரஹ்மஸ்ரீ. எ. நடராஜையர்] ... 111
6. புஸ்தக விமர்சம்:— ... 116
7. கடிதங்கள்:— ... 117
8. ஸம்பாதகரின் குறிப்புகள்:— ... 121
9. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவசார்யர் ... 329

SRI VAIDIKA MATA DEEPIKA

A monthly Magazine in Tamil, on Hindu Religion and Philosophy. Contains articles on Social, Religious and other problems affecting the well-being of all Hindus and mankind in general. The best medium for a healthy and peaceful exchange of views on topics relating to lives both here and hereafter.

Subscription (annual) Rs.	3 0 0
Single copy	0 5 0

Apply to:—

Manager, Kotnis Gardens E. Mambalam,

Teynampet, P. O., Madras.

ஸ்ரீ:.

ஸ்ரீயை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ வைதிக மத தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 1.] ஸ்ரீமுக௵ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 4.

ஸ்ரீ :

ஸர்வமத வினு விடை

வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி
V. R. நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 3, பக்கம் 65)

கோபால்:—அண்ணு! தாங்கள் சொல்வதிலிருந்து ஸித்தாந்தத்தின் உயர்வு தாழ்வுகள் எல்லாம் பெரும்பாலும் ப்ரமாணங்களின் ஏற்றத் தாழ்வுகள் அல்லது விரிவு குறைவுகளைப் பொருத்தனவென்று ஏற்படுகிறதன்றோ? இனி: ஒரு மதஸ்தருக்கு இது காறும் கிடைத்திராத ஒரு புதிய ப்ரமாணம் இன்று கிடைத்ததானுல், அப்போது அவருடைய அன்று வரையிலுள்ள கொள்கையைத் தாண்டிச் சென்று அவர் அதினின்று மாறிவிட நேருமே. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பம் எல்லா மதத்தினருக்குமே நேரக்கூடிய தாகையால், மதக் கொள்கைகள் யாவும் நிலையற்றவை யென்றல்லவோ ஆகிவிடும்?

பலராம்:—தம்பீ! இவ்வளவு மட்டுமேல்ல; இன்று வரையில் தக்க ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒன்று, விசேஷ ஆராய்ச்சியின் பயனாக ப்ரமாண வகுப்பிலிருந்து விலக்கப்பட்டும் போகலாம். அப்படி விலக்கப்பட்ட காலத்தில் அந்த ப்ரமாணத் தைக்கொண்டு முன் நிர்ணயித்து வைத்திருந்த தத்வத்தையும் கைவிட வேண்டி வருமாதலால், அப்போதும் அவர், தமது முன் னிருந்த கொள்கையை விட்டுத் தீர வேண்டியதுதான்.

கோபால்:—அப்படியானால் நாம் ஒரு மதத்தையும் நிலையாக நம்புவதற் கில்லையே! இப்படியிருக்க, சமயிகள் எது கொண்டு தந் தம் மதத்தைத் தழுவி நின்று க்ஷேமம் பெறுவது?

பலராம்:—தம்பீ! இவ்விதத் தொல்லை ஏற்படாமலிருப்பதற்கா கவே மத ப்ரவர்த்தகர்களான ஆசிரியர்கள் அடிக்கடி குலைந்து போகாதபடி, ஆரம்பத்திலேயே ஆய்ந்து ஓய்ந்து பார்த்து, ப்ரமாண வர்க்கத்தை இணைத்து வைத்துக்கொண் டிருக்கின்றனர். அவ்வளவு பந்தோபஸ்தையும் மீறி அதற்கும் மாறவேண்டிய அவஸரம் வரு மானால், அப்போது அதைக் கூசாமல் மாற்றிக் கொள்ள வேண்டி யதுதான். அப்படி ப்ரமாணத்தை முன்னிட்டு ஏற்படுகின்ற மாறு தல், மதத்திற்கு ஒரு குறையாகாது. ஒந்திபோல நிமிஷத்திற்கு நிமி ஷம் நிஷ்காரணமாய் மாறிக்கொண்டே யிருப்பது பிழைதா னென்று லும், தக்க ப்ரமாண பலத்தினால் ஏற்படும் மாறுதலை எச்சமயத்தா ரும் ஒத்துக்கொள்ள வேண்டியது தான். இன்றேல், நூதநமான தத்வ பாகங்களைக் கண்டு பிடித்து ஏற்றுக் கொள்வதற்கும், சிதில மான பழைய அம்சங்களைக் களைந்து விலக்குவதற்கும் வகையில் லாமற் போய்விடும். ‘எங்கள் தாதா காலத்து ஒற்றைமாட்டு வண் டியை விட்டு, மற்றொன்றைத் திரும்பிக் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டேன்’ என்று ஒருவன் கவிழ்ந்து கிடந்தால், வைமாநிகர் போல் ஆகாயத்தில் பறப்பதற்கும் மகரம்போல் ஸமுத்ரத்தில் மூழ்கிச் செல்வதற்கும் தான் வழியேது? ஆகவே தம்பீ! மத வ்ய வஸ்தைகளை ஒரு வரையறைக்குள் வைத்திருக்கவேண்டியது யுக்தந் தான் என்றாலும், அவற்றை க்ரமமான அபிவ்ருத்திக்குக்கூட இடங் கொடாமல் அடியோடு அகழில் அடைத்துப் போடுவது மூடச் செய லாகும். ஏனெனில்: ஸித்தாந்தங்கள் யாவும், முடிவின்றி வளர்ந்து கொண்டே யிருக்கிற கல்பக விருக்ஷங்கள் என்பதைச் சமயிக ளெவ ரும் மறந்து விடலாகாது. இதுபோலவே ப்ரமிதிக்குத் தக்கபடியும் தத்வம் திரும்பிவிடு மென்பதையும் ஊஹித்தறியவும்.

கோபால்:—அண்ணு! இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கையில், உலகத்திலுள்ள அத்யாத்ம ஸித்தாந்த மென்று சொல்லப்படுகிற சமயிகள் செய்து வைத்திருக்கிற ஆத்மாவைப் பற்றிய நிர்ணயங்கள் யாவும் சாச்வதமாக நிலைத்திருப்பவை யல்லவென்றும், அவற்றுள் ஒன்றேனும் இன்றுவரைக்கும் பூர்த்தியடைந்திருக்கவில்லை யென்றும் ஏற்படுகிறதே. இது ஸித்தாந்தங்களுக்குக் குறை வன்றோ?

பலராம்:—தம்பீ! இன்று வரையில் எந்த ஸித்தாந்தமும் பூர்த்தியாகி விடவில்லை தான். மேலும் எந்த ஸித்தாந்தமும் இப்போதிருப்பது போலவே எப்போதும் சாச்வதமாய் யாதொரு மாறுதலையும் அடையாம லிருக்கு மென்றும் சொல்வதற்கில்லை. ஆனாலும் இதில் குறையென்ன இருக்கிறது? ஸித்தாந்த மென்ப லென்ன? ஏதேனு மொரு (ஆத்மா என்பது போன்ற) அபூர்வமான பொருளை, கிடைத்த ப்ரமாணங்களைக் கொண்டு நன்ருகச் சோதித்துப் பார்த்து, அதனல் அப்பொருளைப்பற்றி ஏற்படுகிற யாதாமொரு நிர்ணயத்தில் 'இது சரிதான், இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று த்ருப்தி யடைந்து நிற்றல் தானே. இனி: அந்த ப்ரமாணம் பற்றவில்லையென்று தோன்றினும், அல்லது ப்ரமேயத்தைப் பற்றிய தீர்மானத்தில் த்ருப்தி குலைந்து விட்டாலும், உடனே மாற்ற வேண்டியதைத் தவிர வேறு கதியில்லை யென்றிருக்கையில், ஸித்தாந்தங்களைச் சாச்வதங்க ளென்றோ ஸம்பூர்ணங்க ளென்றோ சொல்வதற்கு இடமேது? மேலும் இன்னு மொரு விசேஷ மிருக்கின்றது பார். ஒரு தென்னை மரத்தில் பழுத்த குலையிலிருந்து ஒரு தேங்காய் அற்று விழுந்ததானல் அது தரையில் அநேகமாய் இன்ன விடத்தில் தான் வந்துவிழு மென்று முன்னதாகவே முடிவு கூறுவது ஸாத்யமாகும். அந்த மரத்திலிருந்தே ஒரு பருந்து கிளம்பிச் சென்ருல், அது எந்தத் திக்கிற் பறந்து செல்லும் என்றும், எங்கே போய் இறங்கு மென்றும் சொல்வதற்கு ஸாத்யப்படுமா? இல்லையே. ஏன்? தேங்காய் அறிவற்ற ஒரு பொரு ளாதலால் அதற்குத் தனது கதியை மாற்றிக்கொள்ளத் திறனில்லை. ஆகவே அதன் முடிவு நமக்குத் தெரிந்து விடுகிறது. பருந்தோ வெனில்: அறிவுள்ள பிராணி. அதற்குத் தான் நினைக்கிறபடி தனது கதியை மாற்றிக் கொள்ளச் சக்தியிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி யாம் ஒரு முடிவையும் கூறுவதற்கு ஸாத்யப்படுகிறதில்லை. நாம் கிழக்கே என்றோமானல் அது மேற்கே திரும்பிவிடலா மன்றோ? இந்த ஸ்வல்பத்தில் இத்துணை வித்தியாஸ மிருக்கிறதே; இப்படியிருக்க, எப்படி வேண்டுமோனாலும் தான் நினைக்கிறபடி யெல்லாம் ஸஞ்சரிக்கின்ற ஸ்வதந்த்ர சேதந

னை ஆத்மாவைப்பற்றி, இனி இவ்வாத்மா இவ்விடத்தை விட்டு அரை அங்குலம் கூடப் பெயரக்கூடாதென்று கோட்டிற்குள் அடைத்துவைக்கப் பார்த்தாயானல் இவ்வடாத்காரத்தை அது பொறுத்திருக்குமா வென்று நீயே நன்ருய் யோசித்துப் பார். எனவே மதக் கொள்கைகள் காலக்ரமத்தில் மாறிவிடப் போகின்றனவே யென்று நீ சற்றுக்கூட விசாரப்படாதே. அவை மாற வேண்டியதுதான். ஆதலால் அவைகள் க்ரமமாக எவ்வளவு விசாலமாய் வளரக்கூடுமோ, அவ்வளவிற்கு வளரும்படி அவற்றை அதிக நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தாமல் விட்டுவிட வேண்டியது தான் ந்யாயம்.

கோபால்:—ஆமாம் அண்ணு! நீங்கள் சொல்வது யுக்தம் தான். ஸித்தாந்தங்கள் சற்றேனும் மாறுதலின்றி ஒரேமாதிரியாக எப்போதும் நிலைத்திருக்கமாட்டா என்பதைப்பற்றியாவது, அவற்றுள் ஒன்றும் இன்றுவரை ஸம்பூரணமாய் நிறைந்திருக்கவில்லை என்பதைப்பற்றியாவது குறைகூறுவது உசிதமில்லை. அவைகளின் அபிவ்ருத்திக்கு உரிய மாறுதல்களுக்கெல்லாம் இடம்விட்டு, அவைகள் பூர்ணரூபத்தைப் பெறுவதற்குத் தடைசெய்யாமலும் இருக்கவேண்டியதுதான். ஆனாலும் இவ்விடத்தில் எனக்கு ஒரு சங்கை உண்டாகின்றது. அதென்னவெனில்: அப்படிப் பூர்ண ரூபத்தைப் பெற்ற பின்பே யன்ருே அவற்றிற்கு அழகும் பயனும் ஏற்படும். அரைகுறையாயிருக்கும்போது எக்காரியமும் அழகு பெறுவதுமில்லை, பய னளிப்பது மில்லையே. இனி அழகில்லை யென்று விட்டால், மனிதருக்கு அதில் ருசி எப்படி யுண்டாகும்? பய னில்லையானல் அதை அநுஷ்டிப்பதற்கு மனிதர் எப்படி ப்ரவ்ருத்திப்பர்? இன்றைக்கும் கூட, சமயிகள் யாவரும் தந்தம் மதத்தில் அது ஸம்பூர்ண ஸௌந்தர்யம் வாய்ந்துளது போல் வ்யாமோஹங் கொண்டு, ஸமக்ரமான பயனை யளிக்கும் வரையில் அது வளர்ந்து தீர்ந்து விட்டாற்போல் பற்றி நின்று, மிக்க நம்பிக்கையுடன் அதை அநுஷ்டித்துக்கொண்டு வருவதைக் காண்கின்ருேமே. இது எதனு லென்பதை மட்டும் சொல்லிவிடுங்கள்.

பலராம்:—தம்பி! நீ இதைக் கேட்கும்கும்போது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது. அதைச் சொல்லுகிறேன் கேள். அதன் பின் உனது ஸந்தேஹம் தானுகவே தெளிந்துவிடும்.

ஒரு தேசத்தில் ப்ரதாபவர்மனென்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் நிறைந்திருந்தும், மக்கட்பேறு ஒன்று மட்டு மில்லாம லிருந்தது. அதற்காக அவன் ஈச்வர

னைக் குறித்து வெகுகாலந் தவஞ்செய்தான். பகவானும் அத்தவத் திற்கு உவந்து அவன் முன் தோன்றி வேண்டிய வரனைத் தருவதாக வாக்களித்தார். தனக்கு, எல்லா அரசர்களையும் தன் வல்லமை யினால் ஜெயித்து அதனால் ஸர்வஜித் என்கிற புகழ்ப் பெயர் பெற்று விளங்குகின்ற ஒரு உத்தம புத்ரனை அருளும்படி அரசன் பகவா னைக் கோரினான். பகவானும் 'அப்படியே ஆகுக' என்று அநுக்ர ஹித்து மறைந்தார். சில நாட்களுக்குள் ராஜ பத்நீ கர்ப்பவதி யானாள். பெருமான் அருளியபடி நல்ல சுப முகூர்த்தத்தில் ஒரு ஸத்புத்ரனும் பிறந்தான். மகவு பிறந்த மங்களச்செய்தி மன்ன னுக்குத் தெரிவிக்கப்பட்டது. அச்செய்தியைக் கேட்ட அரசனும் பெருமகிழ்ச்சி எய்தியவனாய்ப் பிள்ளையைப் பார்ப்பதற்காக ப்ரஸவ க்ருஹத்திற்கு வெகு அவஸரமாய் ஓடிவந்தான். தாதிமார்கள் விஜய வாக்குக் கூறி, புத்திரனைக் கையிலேந்திக் காட்டினார்கள். பார்த்தான் மன்னன். என்ன செய்தான்? ஆனந்தித்தானா, ஆசி கூறினானா, ஈச னுக்கு நன்றி செலுத்தினானா, தாதிகளுக்கு இனா மளித்தானா, வேதி யருக்குத் தானங் கொடுத்தானா, ஒன்றுமே யில்லை. 'நானிஷ்டப் பட் டது அஷ்ட திக் விஜயியான கெட்டிக்காரக் குமாரனை யன்றோ? ஈதென்னவோ ஒரு வீர்யமுமில்லாமல் தரையிற் கிடக்கின்றதே' என்று குறை கூறிப் பராங்முகமாய்ச் சென்று விட்டான். தம்பி! அக்குழந்தையைச் சரிவர வளர்த்து, தக்க காலத்தில் அஸ்த்ர சஸ்த்ர வித்தைகளைப் பயில்வித்து, அக்குமாரனை ஒரு போர் வீரனாக் கிய பின்னன்றோ அவ்வரசிளஞ் சிங்கம் அஷ்ட திக்குகளையும் ஜெயித்து வந்து தகப்பனை நமஸ்கரித்து நிற்கையில், விநயத்தினால் குனிந்திருக்கின்ற தநயனுடைய வதநத்தை ப்ரணய ரஸம் பெருக நிமிர்ந்து நோக்கும் பாக்யத்தைக் காணலாம். அப்படிக்கின்றி, பிறந்த வன்றைக்கே குழந்தை போருக்குப் புறப்படாமல் படுத்துக் கிடக் கின்ற தென்று தள்ளிவிட்டால், பிறகு கோரிக்கை ஈடேறுவதற்கு வழி வேறேது? அதுபோல, ஸித்தாந்தங்கள் ஸமக்ரமாகப் பூர்த்தி பெறுவது நமக்கு அபிமதந்தா னென்றாலும், அவ்வப்போதுள்ள வரையில் அதனைக் கருத்துடன் காத்து வளர்த்துக்கொண்டு சென்றா லல்லவோ அக்கோரிக்கை கைகூடும். திக்விஜய மென்கிற பெரும் பயன் பிந்தித்தா னென்றாலும், மத்தியில் அம்மகவினால் ஆனந்தமே யில் லையா? ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒரு மழலைச் சொல்லிலும், ஒரு புன் முறுவலிலும், அநுபவிக்கிற ஸந்தோஷம் ஜந்மத்திற்கே போதுமே. அதுபோல், மோக்ஷம் அல்லது ஆத்மலாப மென்கிற மஹா புரு ஷார்த்தம், ஸித்தாந்தங்களின் பூர்ண தசையில் தான் கிடைக்கு மென்றாலும், அதற்குள்ளாகவே மாந்தருக்கு மதவுணர்வினால் உண்

டாகிற மனத்தூய்மை நன்னடத்தை முதலான நற்பயன்கள் ஆயிரமிருக்கின்றன அல்லவா? ஆதலால் மனிதர் தந்தம் மதத்தை எந்த நிலையிலும் மனதோடு பற்றி நடப்பதற்குத்தடை என்ன இருக்கிறது

மேலும் மனிதருக்கு ஒன்றின் மீது பற்று உண்டாவதற் கெல்லாம், அவர் மனது அதில் ருசியடைந்தது என்பது மட்டும் முக்கிய காரணமேயன்றி, அப்பொருளின் பூர்த்தியும் பூர்த்தியில்லாமையும் அதற்கு ப்ரதாந மல்ல. தான் அருமையாய்ப் பெற்றெடுத்த புதல்வனை மடியில் வைத்துக்கொண்டு, நிமித்தமொன்று மில்லாமல் இயற்கையாகவே அது செய்யும் புன் முறுவலில் முத்துப்போன்ற பற்களினின்று ஒளி வீசுவதும், மதுபிந்து போன்ற அக்ஷரங்களைக் கொண்ட அவ்யக்தமான மழலைச் சொற்களைப் பொழிவதுமான அதன் வதநத்தை முத்தமிடும் பாக்யத்தைப் பெற்றிருப்பவளான ஒரு குலமகள், அதில் தான் பெறும் ஆநந்தத்தை மற்றெங்கிருந்தேனும் அடையக் கூடுமென்று கனவிலுங் கருதமாட்டாளன்றோ? அவள் முன்சென்று ‘இதோபார் என் முகத்தை’ என்று ஒரு மடையன் வீசையை உருவினானாகில் அது மானக்கேடேயன்றி வேறென்ன? அது அம்மங்கையின் மனத்தை மாற்ற மாட்டுமோ? ஒரு போதுமில்லை. இந்த ந்யாயம் ஸித்தாந்தங்களுக்கு முள்ளது தானே. குறைந்ததோ நிறைந்ததோ, எவரெவருக்கு எந்தெந்த ஸித்தாந்தம் மனத்திற்கு ருசித்திருக்கிறதோ, அவரவர் அததனைப் பற்றி நின்று த்ருப்தி பெறுகின்றனர். தம்பீ! ஆகையால் மத ஸித்தாந்தங்கள் இன்றைக்கே பூர்த்தி பெற்றிருக்கவில்லை யென்பது கொண்டு, மனிதர்கள் அவற்றில் ப்ரவ்ருத்திக்க மாட்டார்க ளென்றாவது, அதனால் ப்ரயோஜந மொன்றும் இராதென்றாவது இனி நீ நினைக்க மாட்டாயே. விஷயத்தை நன்கு தெரிந்துகொண்டா யல்லவோ ?

கோபால்:—அண்ணா ! தெரிந்துகொண்டேன். பூர்ணமோ அபூர்ணமோ, அவரவர்களுக்கு மனதிற்கு ருசித்திருக்கின்ற ஸித்தாந்தங்களில் அவரவர் ச்ரத்தைகொள்கின்றனர். அவற்றின் அநுஷ்டாநத்திலும் அவரவர்களுக்கு அவாந்தரமான ப்ரயோஜநங்களும் அநேகம் இருக்கின்றன. முக்யமான ஆத்மலாப மென்கிற பெரும் பயனும், அவை பூர்த்தியடைந்து அநுஷ்டிக்கப்படுமானால் அந்நிலையில் கைகூடி விடும் என்பதுதான் இப்போது தாங்கள் சொல்லியதின் சுருக்கமென்று நினைக்கிறேன். இனி: இவ்வழியில் எனக்கொரு ஸந்தேஹம் தோன்றுகிறது. ப்ரகாசம் முதலான குணபாகத்தில், ஏற்றத் தாழ்வுள்ளவைகளான ஐந்தாறு ரத்நங்களை நல்ல பரீக்ஷகர்களான நாலு பேரிடத்தில் காட்டினோமானால், அவர்களெல்

லோரும் அவற்றுள் உயர்ந்ததாயிருக்கின்ற ஒன்றையே தான் வாங்குவது நலமென்று கூறுகின்றூர்கள். அவர்க ளெல்லோருக்கும் அவ்வொன்றிலே தான் ஒருமித்த மதிப்பு ஏற்படுகிறது. அதுபோல ஸித்தாந்தங்கள் பூர்த்தி அபூர்த்தி இத்யாதிகளினுல் தாரதம்ய முள்ளவைகளாயிருப்பது ஸஹஜமானுலும், மேதாவிகளா யிருப்பவர்கள் பூர்ணமான ஒன்றைமட்டு மன்றே அங்கீகரிப்பார்கள். அப்படியிருக்க, மாந்தர்கள் அவரவர் அபிலாஷைக்குத் தக்கபடி பல்வேறு மதக் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகலாயின ரென்பது அவ்வளவு பொருத்த முள்ளதாகத் தோன்றவில்லையே !

பலராம்:—தம்பீ ! மனிதருக்கு மதக் கொள்கைகளில் சித்தம் ருசியடைவது, உணவுவகைகளில் நாவிற்கு ஏற்படுகின்ற ருசியைப் போன்றதுதான். பெரிய பங்க்தி போஜநத்தில் நாநாவிதமான உணவு வகையைப் பக்குவப்படுத்தி வைத்திருந்தால் போஜநத்திற்கு உட்காருகிறவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொன்றையே அதிகமாய் விரும்புவர். அதற்குக் காரணமென்ன ? ருசி எனப்படுகிற நெடுநாளாக நாவுக்கு ஏற்பட்டுள்ள வாஸனையே தான். அதுபோலவே, சித்தத்திற்கும் விசித்ரமான வாஸனைகள் பலவுண்டு. தந்தம் வாஸனைக்குத் தக்கபடி மாந்தர்கள் தமக்கேற்ற ஸித்தாந்த பேதங்களையே அங்கீகரிக்கின்றனர். இதை இன்னும் சற்று நன்ருக விளங்கச் செல்லுகிறேன் கேள். மநுஷ்யரென்பது விலக்ஷணமான ஒரு சைதந்ய சக்தியை ஏற்றுக் கொண்டிருக்கின்ற (அதாவது உடந்தையாக உணர்வு வாய்ந்திருக்கின்ற) தேஹேந்த்ரியாதிகளின் ஸமுதாயம் (கூட்டுறவு) தானே. அவற்றுள் ஜட பாகமான தேஹேந்த்ரியாதிகளுக்கு ஜட பதார்த்தங்களேயான அந்ந பாநாதிகளினுல் ஆப்யாயநம் (அதாவது:. திருப்தியும் புஷ்டியும்) ஏற்படுகின்றதானுலும், சைதந்யமயமான உயர்ந்த மற்றெரு பாகத்திற்கு இவற்ருல் த்ருப்தி ஏற்பட்டு விடுகிறதில்லை. அதன் பசியும் வேட்கையும் அத்யாத்ம ஸித்தாந்த நிர்ணயத்தினுலே தான் தீரவேண்டும். அஃதொன்றினுல் தான் அது த்ருப்தியடைகிறது. அஃதில்லை யென்ருல், அந்த பாகத்தின் குறையும் நீங்குகிறதில்லை தான். ஆனதினுல் தான், "எதுவின்றி மனிதர்கள் இன்பத்துடன் உயிர்வாழ முடியாதோ, அது பௌதிக சாஸ்திரம்; எதுவின்றி அவர்கள் உயிர்தரித்திருக்கவே ப்ரியப்படமாட்டார்களோ, அது அத்யாத்ம சாஸ்த்ரம்" என்று பரிசோதகர்களான மேதாவிகள் சிலர், தாம் **Science** (ஸயன்ஸ்) **Philosophy** (பிலாஸபி) இவ்விரண்டிற்கும் முறையே விஷய விசேஷத்தை வகுத்துக் கூறியிருக்கின்றனர். எனவே உடலைப் பேணுவதற்கு அந்ந

பாநாதிப் பொருட்களை ஸம்பாதிப்பது போல, உயிரெனப்படும் சைதந்யத்தைப் போஷிப்பதற்கு அத்யாத்ம ஸித்தாந்த விசேஷங் களை ஸங்க்ரஹிப்பதும் மனிதருக்கு இன்றியமையாத தாகின்றது. எனவே, அவரவர் ருசிக்கு ஏற்ப அததனை அங்கீகரிக்கின்றனர். ஆகவே இனி, எல்லோரும் எதனால் ஒன்றையே பற்றவில்லை யென் கிற கேள்விக்கும் இடமில்லை. பலவற்றைப் பற்றியது கொண்டு அவர்களுக்குள் ஸாமர்த்யத்தில் தாரதம்யம் சொல்வதும் ந்யாய மில்லை.

கோபால்:—அண்ணா! இதன் உண்மை நன்றாக விளங்கி விட் டது. ஆனால் இன்னும் ஒரு கேள்வி கிளம்புகிறது. அதற்கும் விடை யளித்துவிடவேண்டும். அதென்னவெனில்: இவ்வழியாகப் பார்க்கையில் பற்பல ஸித்தாந்தங்கள் என்பதெல்லாம் பரிபாக பேதங்கள் (அதாவது: வளர்ச்சியில் குறைவு நிறைவு) என்கிற தசா பேதங்களே யொழிய, மொத்தத்தில் மதமென்பது ஒன்றே தானென்று ஏற்படுகின்றதே. இனி மதஸ்தர்கள் சார்வாக மென் றும் ஜைநமென்றும் ஒன்றற் கொன்று ஸம்பந்த மில்லாததுபோல பலபடியாகப் பிரித்து வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றையே அபி மானித்து அதோடு முடிந்து விட்டாற் போல நின்று விடுகின் றனரே. இதற்குக் காரண மென்னவோ?

பலராம்:—தம்பீ! இதற்கு முக்ய காரணம் உன் வாக்கிலிருந்தே வெளிவந்து விட்டது. அதென்ன வெனில்: அபிமாந மென்றாயே அதுதான். அப்படிப்பட்ட அபிமாந மொன்று ஏற்படுவது ஸஹ ஜந்தா னென்பதோடு, அதற்கு விசேஷமான ப்ரயோஜநமும் இருக் கின்றது. அதென்னவெனில்: மதமென்பது மாந்தர்களுடைய மன அபிவ்ருத்திக்கான ஸாதநந்தானே. மனிதர் யாவரும் ஒரு வகைப் பட்டா இருக்கின்றனர்? சரீரத்தைப் பற்றின வரையில் அது சிசு, பாலன், குமாரன், யுவா, தருணன், முதியவன் என்று பலதரப்பட்டி ருப்பது போல, மனத்தினதான மதத்தைப் பற்றியும் பல்வகைப் பட்டே யிருக்கின்றனர். அங்கு, அவ்வத்தசைக்குத் தக்கபடி உணவுப் பொருள்கள் லகுவாயும் கடிநமாயும் வெவ்வேறு விதமாகவே வேண்டி யிருப்பன போல, இங்கும் மனத்தின் பரிபாகத்திற்குத் தக்கபடி மதமும் வேறுபட்டு இருக்க வேண்டியதுதான். அங்கு, ஒரு குழந் தையை வளர்ப்பவள், அதற்குக் கொடுப்பதற்கான பாலைவிட பர மாந்நத்தை உயர்ந்ததாக நினைப்பளா? அல்லது அக்குழந்தைக்குத் தான் அதை ஊட்டுவளா? அதுபோல, இங்கும் மத ஸ்தாபகர்கள் தம்மிடத்தில் உபதேசம் பெற விருக்கும் கோஷ்டியினுடைய மனப்

பக்குவத்திற்குத் தக்கபடி ஸித்தாந்த விசேஷங்களைப் போதிக்கின்றனர். அந்தந்தக் கோஷ்டியின் முன்னேற்றத்திற்கு உற்ற தத்வங்களை விட உயர்ந்த தென்று மற்றொன்றை நினைப்பது மில்லை, உபதேசிப்பது மில்லை. அப்போதைக் கப்போது அவரவர்களுக்கு அதுவேதான் முடிவு, என்ற துணிபோடுதான் இருப்பார்கள். இப்படிப்பட்ட த்ருட நம்பிக்கை யில்லாமற் போனால் ஓரிடத்திலும் ஊன்றி நிற்காமல், மனத்திற்கு ஏற்காத கொள்கையி லெல்லாம் புத்தியைச் செலுத்திப் பயன் பெறுமல் தடுமாறும்படி யன்றோ ஆகிவிடும்? இவ்விஷயத்தின் ரஹஸ்யம் இப்படியிருப்பதினால் தான், ஆஸ்திகர்களுக்குள் ஒரு சாரார், ‘மதங்கள் யாவுமே மாந்தரின் புத்தி பரிபாகத்திற்குத் தக்கபடி பரமேசுவரன் ஒருவனாலேயே உபதேசிக்கப்பட்டவை’ என்று கூட ஸித்தாந்தம் செய்து வைத்திருக்கின்றனர்.

கோபால்:—அண்ணா! அப்படி மதங்கள் யாவும் பரமேசுவரன் ஒருவனாலேயே உபதேசிக்கப்பட்டு அநாதி காலமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன என்னும் கொள்கை, மிக்க மேன்மை பொருந்தியதாகத் தோன்றுகிறதே. அவ்வுத்தம ஸித்தாந்தத்தை வெளிப்படுத்தியது யாரென்றும், எம்முறையிலென்றும், சொல்லக் கூடுமானால் அதைக் கேட்டறிவதற்கு விரும்புகின்றேன்.

பலராம்:—தம்பீ! சொல்வதற்குத் தடையென்ன? சொல்லுகின்றேன் கேள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

தர்ம சாஸ்த்ரம்

எல்லா மனிதர்களும் தர்மத்தினால் நன்மையை அடைகிறார்கள் என்றால், அந்தத் தர்மத்தை ஒருவன் தனது மனத்திற்கு மட்டிலும் ப்ரியமான கர்மாவினால் அடைய முடியாதென்றும், வேதம் ஸ்ம்ருதி முதலியவைகளைத் தெரிந்துகொண்டு செய்வதால் தான் நன்மையை அடையலாமென்றும் மநு சொல்லுகிறார்:—

“𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌹𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ।
𑌇𑌹 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌚𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥”

[வேதம் ஸ்ம்ருதி இவைகளில் சொல்லியபடி தர்மத்தைச் செய்கின்ற மனிதன், இவ்வுலகில் கீர்த்தியையும் பரலோகத்தில் ஒப்பற்ற ஸுகத்தையும் அடைவான்.]

இப்படிச் சொல்லிய மநுவின் வார்த்தையால் சிலர், தமது மனத்திற்குப் பிடித்ததைச் செய்வதே மதமென்று சொல்வதைத் தவறென்று அறியவேண்டும். மஹாத்மாவான மநு, தமது மனத்திற்கு மட்டிலும் பிடித்ததே தர்மமென்று சொல்லாமல், வேதம் ஸ்ம்ருதி இவைகள் சொல்வதே செய்யத்தகுந்த தர்மம் என்றார். ஆகையால் ஸர்வேச்வரனுடைய மதமான (அபிப்ராயமான) வேதமே மதமென்று அறிய வேண்டும். வேதமாகிற ஸர்வேச்வர மதத்தை அநுஸரித்துச் சொல்லும் க்ரந்தமே ஸ்ம்ருதி எனப்படும். இதைக் காளிதாஸன் ரகுவம்சம் இரண்டாம் ஸர்க்கத்தில், புத்ர லாபத்தைக் குறித்து நந்தினீ என்னும் பசுவை வஸிஷ்டரின் உத்தரவுப்படி திலீப ராஜன் வநத்திற்கு ஓட்டிச் செல்லுங்கால், அரசனுடைய மனைவியான ஸுதக்ஷிணை கூட அநுஸரித்துச் செல்வதை வர்ணிக்குமிடத்தில்,

“மார்கம் மநுஷ்யேச்வரதர்மபத்நீ
ச்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத் ।” என்கிறார்.

[அதாவது: வேதத்தின் அர்த்தத்தை அநுஸரித்து ஸ்ம்ருதி சொல்வதுபோல் அந்த மார்க்கத்தை அநுஸரித்துச் சென்றாள்.] இப்பொழுது சிலர், இந்தக் காலத்திற்குத் தகுந்தபடி ஸ்ம்ருதி எழுதப்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. வேதார்த்தத்தை அநுஸரித்த புஸ்தகம்தான் ஸ்ம்ருதி. வேத விருத்தமான கார்யம் செய்வதற்கு அநுகூலமான இக்காலத்துக்குத் தகுந்த புஸ்தகம் எழுதினால் அது ஸ்ம்ருதி ஆகுமோ? மநு முதலிய பெரியோரும் வேதார்த்தத்தை அறிந்து, அதில் சொல்லியுள்ள கார்யங்களைச் செய்து நன்மையை அடைந்து, தாங்கள் செய்த அநுபவத்தையே புஸ்தகமாக எழுதியிருக்கிறார்கள். அதில் சொல்லியுள்ளபடி செய்தால் வ்யாதி முதலிய ஒரு துன்பமும் வராது. ஸர்வஜ்ஞமான வேதமானது ஓரிடத்தில்,

“யத்வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்”

[மநு கொஞ்சம் சொல்லியதெல்லாம் மருந்து] என்றது. ஆதலால்தான், ஸ்ம்ருதி கர்த்தாக்களுக்குள் மநுவிற்குப் பெருமை அதிகம். சில ஸ்ம்ருதிகளில், ‘மநு இப்படிச் சொல்கிறார்’ என்று புகழ்ந்து சொல்லியிருக்கிறது.

மநு முதலிய பெரியோர்கள், ஒவ்வொருவரும் தினந்தோறும் செய்யவேண்டிய கர்மாக்களை அந்தந்த ஜாதிக்குத் தக்கவாறு உபதேசித்திருக்கின்றனர். அதிலும், ப்ராஹ்மணன் அதிகமான கர்மாக்கள் செய்யும்படி சொல்லியிருக்கிறது. ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தால், முதற் பிள்ளையானவன் அதிகமான வேலையைத் தனது பெரியோர்களின் கட்டளையினால் செய்வது போல், ஸர்வேச்வரனுடைய சரீரத்திலிருந்து உண்டானப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களான நான்கு பிள்ளைகளும் பகவானென தகப்பன் கட்டளையிட்ட வேலையைத் தான் செய்யவேண்டும். ஆனால் ப்ராஹ்மணன், 'எனக்கு இப்படி அதிகமான வேலையை விடியற் காலையிலிருந்து செய்யும்படி கொடுத்தால் எப்பொழுது ஸுகமாக இருப்பது?' என்று வினைக்கலாம்.

"𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌤𑍁 𑌨𑍇𑌹 𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇|
𑌇𑌹 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌯 𑌮𑌹𑌤𑍇 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌸𑍁𑌖𑌾𑌯 𑌚|"

[ப்ராஹ்மணனுக்குச் சரீரமானது இவ்வுலகில் ஸுகத்தை அநுபவிப்பதற்கு அல்ல; பரலோகத்தில் அநந்தமான ஸுகத்தை அநுபவிப்பதற்கே.] என்று ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்குங்கால் சிலர், 'வேத சாஸ்த்ரங்கள், ப்ராஹ்மணன் எழுதிக்கொண்ட புஸ்தகம்; தங்களுக்கு ஸாதகமாக அவற்றை எழுதிக்கொண்டு விட்டார்கள்' என்கின்றனர். தாங்கள் அதிகமான சுமையைத் தூக்கவேண்டுமென்று தாமாகவே ஒருவர் எழுதி வைத்துக்கொள்வார்களா வென்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

சேங்காலிபுரம். அநந்தராம தீக்ஷிதர்.

(தொடரும்)

ஸத் சூத்ர தர்மம்:—இது ஒரு சிறிய புஸ்தகம். இதில், நாலாவது வர்ணத்தார்களால் திநம் தோறும் அநுஸ்டிக்கப்பட வேண்டியவையாக மஹர்ஷிகளால் சொல்லப்பட்டுள்ள தர்மங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு, புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யரால் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணு 2 தபால் சார்ஜு வேறு "திருச்சி ஜில்லா எலமனூர் போஸ்ட் திருப்பள்ளத்துறை ஸ்ரீ. உ. வே. வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யர்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

சக்கரவர்த்தி அரசியல்

அயோத்தியாபுரிக் கதிபதியாகிய தசரத மகாராஜா மூன்றுல கும் ஈன்றுனை முன் வீன்ற ஸ்ரியஃபதியான ஸ்ரீமந் நாராயணனைப் புத் திரனுகப் பெற்றதால், சக்கரவர்த்தி என்ற நிலைபெற்ற நாமத்தைத் தாங்கினுன். அவனது அரசாட்சி முறைமையை ஈண்டுக் கூறுவாம். தன்னுடைய மாட்சிமையுள்ள நிகரற்ற நீதிதவறுத அரசாட்சி நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்ற ஏழுலகங்களிலும் தடையில்லாமல் நடக்கும்படி சிறந்து நின்றுன்; மாண் கதையான இராமாயணத்துக்கு ஓரிறையாய மொய் மாண் கழலோனை ஸ்ரீராமனைப் பெற்ற நல்ல தருமத்தின் வடிவத்தை யொத்தவன்; முதன்மையான உண்மையறிவு, அருள், தருமம், அமைவு, குற்றமற்ற மிடல் வீரம், ஈகை, நீதிநிலை என்கின்ற குணங்க ளெல்லாம் பூரணமாக வுடையவன். மற்றை மன்னர்களிடத்துள்ள நற்குணங்க ளெல்லாம் கூடினுலும், இச்சக்கரவர்த்தியி னிடத்துள்ள சற்குணங்களுட் பாதிக்கும் ஈடாகா. இவனிடத்துத் தானம் வாங் காத அந்தணரும், இவனுற் செய்யப்படாத இராசசூயம் அசுவ மேதம் முதலான யாகங்களும் இல்லை. வேந்தருக் கேய்ந்த யாருஞ் செய்யாத யாகங்கள் இவன் செய்து மறந்து விட்டனவே. அன்னுன் மிக்க அன்புடைமையால் பெற்ற தாயை யொத்திருப்பான். "வேண் டிய வேண்டியாங் கெய்தப் பெறுதலாற் செய்தவ, மீண்டு முயலப் படும்" என்பதற் கேற்ப, வேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்து தருதலால் தவத்தை யொத்திருப்பான். புத்திர னில்லாதார்க்கு நற்கதிப் பேறில்லை யென்பவாதலால் முக்கியனுய் நின்று ஒப்பில் லாத செல்கதி உய்க்கு நீரால் புத்திரனை யொத்திருப்பான். அல் வழியிற் சென்றேரைத் தண்டித்து வருத்துதலால் நோயை யொப் பானுயினும், அரசர்க்குரிய திறல் தண்ணளி இவற்றினேடு மருந்தை யும் ஒப்பான். நுண்ணிய கேள்வி ஆயப் புகுங்கால் ஐயந்திரிபு மயக் கங்களான முக்குற்றங்களையும் அகற்றித் தெரிவித்தலால் அறிவை யொப்பான். யாசகர்களாகிய சமுத்திரத்தை, அவர்கள் மீட்டும் வேறெருவரிடத்துச் செல்லாத வண்ணம், அவர்கள் விரும்பிய பொருள்களைக் கொடுத்துத் தானஞ் செய்தலாகிய புணையை யடைந்தே தாண்டினுன். அறிவு என்னும் அளக்கரை அளவற்ற

நுண்ணிய நூல்களை ஆராய்ந்து, அறிவினு லாராய்தலாகிய புணையைக் கொண்டே கடந்து ஞானக் கரையைக் கண்டான். பகைவராகிய வேலையை ஆயுதத்தா லழித்துச் செயித்தலாகிய புணையைக் கொண்டே கடந்தான். செல்வத்தினுல் தொடர்ந்த போக பௌவத்தை மனம் நிறைவை யடையும்படி அனுபவித்துத் தீருதலாகிய புணையைக் கொண்டே தாண்டினுன். அரசர்க்கரசன் நீதி கோடாது செங்கோல் செலுத்துதலால், பெருமழையும் மழையின்மையு மாகிய குற்ற மின்றி, மாதம் மும்மாரி பெய்து, என்றும் ஒருபடிப்பட வெள்ளம் ஓடுவதாயிற்று. வெள்ளம் ஒருவழி யோடவே தானியவகை விளையுளும் புல் புதல்களும் ஆங்காங்குக் குறைவின்றிச், செழித்தலால் ஒன்றற் கொன்று பகையுடையனவான விலங்குகளும் பறவைகளும் தம்முட் பகை நீங்கிச் சென்ற இடத்துக்கே செல்வன ஆயின. அவை தீநெறி யொழுகிச் சனங்கட்குத் தீங்கு செய்யாவாயின. கொள்ளக் குறைபடாக் கூழுடை வியனகரும், கோனிகர் குடிகடங் கொள்ளை சான்றதுமான அயோத்தியில் தமக்குப் பிரதமத்திற் கிடைத்த நாயகனே பெருஞ் செல்வமும் ஈகைக் குணமும் கட்டழகும் இன்பச் சிறப்பும் மிகுதியாகப் பெற்றிருத்தல் பற்றி, வேசைய ருள்ளமும் ஒருவழி யோடுவதாயிற்று. உலகமெல்லாம் அவ்வரசன் வழிப்பட்டு நிற்கும். எங்ஙனே யென்னில்: மால் நேமிவரை மதிலாகவும், நீண்ட பரவிய பெரும் புறக்கடலானது அகழியாகவும், அஷ்ட குலாசலங்கள் பல்மணி வாமம் மாளிகைகளாகவும், அம்மன்னற்குப் பூமி முழுவதும் அயோத்திமா நகரம் போலும். ஆவரும் வன்மை நேரறிந்து நீட்டலான் மேவரும் கையடை வேலுந் தேயும். எவருடைய வன்மையையும் உள்ளபடி உணர்ந்து தன் கைவேலை ஒரு முறை நீட்டுதல் போதும். இவன் அவனிலும் வலியனுதல் பற்றி இருமுறை நீட்டினுல் போதுமென்று கருதித் நீட்டுதலால் கைவேல் தேய்வதாயிற்று. சக்கரவர்த்தி கைவேலைத் நீட்டுஞ் செய்தியைக் கேள்வியுற்றுப் போர் முயற்சியை விட்டுப் பகையரசர் இவனது பாதங்களில் சாஷ்டாங்கமாகத் தண்டனிடுந்தோறும், அவர்க ளணிந்த கிரீட சிகரங்கள் படத் தன் சேவடியிற் கட்டிய வீரக்கழலும் தேய்வதாயிற்று.

சக்கரவர்த்தியினது குடை, இருளாகிற துன்பத்தைத் தள்ளுதல், பகைவர்கள் முதலியோரால் உண்டாம் பயத்தை ஒழித்தல் முதலியன செய்தலால், புறவிருளை நீக்குதற் கியலாததும் களங்கத்தை யுடையதும் விண்ணிடத்தே மாத்திரம் விளங்குகின்றதுமான விண்மதியினும் மேம்பட்ட தாயிற்று. வயிரவான் பூணணி

மடங்கல் மொய்ம்பினான்,உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற், செயிரிலா உலகினிற் சென்று நின்று வாழ், உயிரெலாம் உறைவதோ ருடம்புமாயினான்; எல்லா உயிர்கள்மீதும் மிக்க அன்புடையவன்; குன்று என உயரிய குவவுத் தோளினான். வெற்றியைத் தருகின்ற அழகிய ஆஞ்ஞா சக்கரமானது வெவ்விய சூரிய மண்டலம் போல மீமிசை நின்று நின்று ஒன்று என உலகிடை உலாவி எல்லா வுயிர்களையும் மிகுதியும் பாதுகாவாநிற்கும். எய்பென எழுபகை எங்கும் இன்மையால்,மொய் பொருதினவுறு முழவுத் தோளினான், வையகம் முழுவதும் தரித்திரனா யிருப்பவன் காக்கின்ற சிறுகழனியைப்போல் தன்னானும் தன் பரிசனத்தானும் கள்வர் பகைவர் முதலியவர்களானும் வருத்தம் நேரிடா வண்ணம் நன்றாக உயிர்களைக் காத்து அரசாட்சி செய்பவனானான்.

மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர், நிசரதக் கணைகளால் நீறு செய்ய யாம், கச ரத துரகமாக் கடல் கொள் காவலன், தசரதன் மதலையாய்த் தாரணி வருதும் என, அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை மலையென விழிதுயில் வளரு மாமுகில் அமரருக்கு அபய மளித்து, கருமுகிற் கொழுந் தெழில் காட்டுஞ் சோதியைத் திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை என்னலாம்படி இராவணன் றன்னை வீட்டி, இராமனாய் வந்து தோன்றித் தராதல முழுதுங் காத்தான். துனியின்றி யுயிர் செல்லச் சுடராழிப் படை வெய்யோன், பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன், தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான், மனுவென்ற நீதியான், அறுபதினாயிர மாண்டு இந்நிலவுகலத்தை யாண்டு வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவனு மானான். ‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்றவாறு இப்பூதவுடம்பு நீங்கினாலும் தன் தனயனானும் தன் நல்லறத்தானும் புகழுடம்பை என்றும் நிறுவி விட்டான் புகழ்த் தயரதன்.

பி. ஆர். திருமலை ஐயங்கார்.

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்

கீழ் இரண்டு வஞ்சிகைகளில், ' சரீரம் ' என்னும் சப்தத்தின் அர்த்தம் விசாரிக்கப்பட்டது. 'ப்ருதிவீ அப் தேஜஸ் வாயு ஆகாசம் என்னும் இவைகளுடைய சேர்க்கையால் ஏற்பட்டு, இந்த்ரியம் முதலியவைகளுக்கு ஆச்ரயமாயிருக்கும் நமது சரீரம் போன்ற சரீரத்தையே அந்தச் சப்தம் குறிக்கும்' என்று சொல்வது, லோகத்திலும்வேதத்திலும் அந்தச்சப்தத்தால்குறிக்கப்படும் வஸ்துக்களெல்லாவற்றுக்கும் ஒத்து வாராமையால் அது அதன் சரியான லக்ஷணமாகமாட்டாதென்றும், ' தான் இருக்கும் காலமெல்லாம் எது மற்றொன்றால் தரிக்கப்பட்டு மற்றொன்றால் நியமிக்கப்பட்டு மற்றொன்றுக்குச் சேஷமாகவே இருக்கின்றதோ, அது அந்த மற்றொரு வஸ்துவுக்குச் சரீரம் ' என்னும் லக்ஷணமே எல்லா விடங்களிலும் ஒத்து வருகிறபடியால் இதுவே அதற்குச் சரியான லக்ஷணமாகுமென்றும், இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் ஸகல பொருள்களும் தாம் இருக்கும் காலமெல்லாம் பகவானாலேயே தரிக்கப்பட்டு அவனாலேயே நியமிக்கப்பட்டு அவனுக்கே சேஷமாக இருக்கிறபடியால் அவைகளைப் பகவானுக்குச் சரீரமென்றும், பகவானை அவைகளுக்கு ஆத்மாவென்றும் சொல்வதற்கு நன்கு அமையுமென்றும் விவரித்தோம். இனி: இவ்விதம் பகவானுக்குச் சரீரமாயுள்ள வஸ்துக்கள், அவ்வஸ்துக்களுக்கு ஆத்மாவாயுள்ள பகவான் இவர்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளைப் பற்றி விசாரிக்க ப்ரவ்ருத்திப்போம்.

முதலில், இந்தச் சரீர சரீரி ஸம்பந்தத்தைச் சரிவர அறிவதால் நமக்குக் கிடைக்கும் ஒரு ப்ரயோஜந விசேஷத்தைச் சற்று விசாரித்துப் பிறகு ப்ரக்ருதத்தை அநுஸரிக்கலாம். வேதத்தில் சில விடங்களில் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" [ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மமே]என்பதுபோன்ற அபேத உபதேசம் தென்படுகின்றது. இந்த வாக்யங்களில் ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமின்மை உபதேசிக்கப்படுகிறபடியால், இவைகளை 'அபேத ச்ருதிகள்' என்று சொல்வார்கள். மற்றும் சிலவிடங்களில், "போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" [கர்ம பலங்களை அநுபவிப்பவன்

ஒருவன்; அவனுடைய அநுபவத்திற்குப் பாத்ரமாகும் வஸ்துக்கள் வேறு; அநுபவிப்பனையும் அநுபவிக்கப் படுமவைகளையும் நியமிக்கிறவன் மற்றொருவன்;] என்னும் பேத உபதேசம் தென்படுகின்றது. இம்மாதிரி உபதேசிக்கும் வாக்யங்களை 'பேத ச்ருதிகள்' என்று சொல்வார்கள். இந்த இரண்டு வாக்ய வர்க்கங்களும் பாஸ்பரம் விருத்த அர்த்தங்களைப் போதிப்பன போலவே தோன்றும். ஒரு வஸ்து மற்றொன்றைக் காட்டிலும் வேறுபட்டதாகவும் வேறுபடாததாகவும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இருப்பது ஸாத்ய மில்லை யன்றோ? ஆனால், வேதம் அம்மாதிரி விருத்த அர்த்தங்களைச் சொல்லமாட்டா தாகையால், விருத்தம் போலத் தோன்றும் இந்த உபதேசத்தின் தாத்பர்யம் எதுவாக இருக்கக்கூடும் என்பதை நாம் விசாரித்தல் வேண்டும். அந்தத் தாத்பர்யத்தை இந்தச் சரீர சரீரி ஜ்ஞாநம் நன்றாக விளக்குகின்றது என்பதே இதன் ப்ரயோஜந விசேஷம். அது எப்படி என்றால்: சரீரத்தைச் சொல்லும் சப்தங்க ளெல்லாம், அந்தச் சரீரத்திற்கு ஆத்மாவாயுள்ள வஸ்துவையும் குறிக்கும் என்று ஒரு ந்யாயமுண்டு. அந்த ந்யாயத்தை அவலம்பித்து நாம், எல்லாச் சப்தங்களும் தம் தம்மால் ஸாமாந்யமாகக் குறிக்கப்படும் வஸ்துக்களைக் குறிப்பதுடன், ஸகல வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயுள்ள பகவானையும் குறிக்கின்றனவென்று அர்த்தம் செய்து கொள்ளக்கூடும். அப்படி அர்த்தம் செய்துகொண்டால், "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" [ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மமே] என்பது போன்ற அபேத ச்ருதிகளில் தென்படும் 'ப்ரபஞ்சம்' என்னும் பதத்திற்கு, 'ப்ரபஞ்சத்தைச் சரீரமாயுடைய ப்ரஹ்மம்' என்று பொருள் ஏற்படும். 'ப்ரபஞ்சத்தைச் சரீரமாயுடைய ப்ரஹ்மம் இந்த ப்ரஹ்மமே' என்று சொல்வதில் விரோத மொன்றும் இல்லையாகையால், மேலெழுந்த மாதிரி தோன்றின விரோதம் பரிஹ்ருதமாகின்றது. இம்மாதிரியே,

"தத்த்வமஸி ச்வேதகேதோ"

[ஹே ச்வேதகேதோ! நீயும் அந்த ப்ரஹ்மமே] என்பது போன்ற ச்ருதி வாக்யங்களுக்கும் தாத்பர்யம் விளங்கும். 'ச்வேதகேது என்று பெயரிடப்பட்டுள்ள ஒருவனைச் சரீரமாகவுடைய ப்ரஹ்மம் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸர்வஜ்ஞத்வாதியான குணங்களுடன் கூடிய ப்ரஹ்மமே' என்பதன்றோ அம்மாதிரியான வாக்யங்களின் கருத்து?

"ஶ:ஹீ¦ராணாꣳகூ¸ருதகஶி¦ரம் ஶாஹதெ விதூவ்¸ரு திூ॰"

[வேதங்களோ கம்பீரமான தாத்பர்யத்தை உடையவை. அந்தத் தாத்பர்யத்தை இந்தச் சரீர சரீரி ஸம்பந்தத்தை அறிந்தவனே நன்கு அறிவான்] என்று ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் அநுக்ரஹித்திருக்கிறபடி இந்தச் சரீர சரீரி ஸம்பந்த ஜ்ஞாநம் நமக்கு இம்மாதிரிப் பரமோபகாரகமாகின்றது.

ப்ரக்ருதத்தை அநுஸரிப்போம். இந்த ப்ரபஞ்சத்தில் நாம் சிலவற்றை அறிவுடையவையாகவும் மற்றும் சிலவற்றை அறிவற்றவையாகவும் காண்கின்றோம். மநுஷ்யன் பசு பக்ஷி முதலியவை அறிவுள்ளவை; கல் கட்டை முதலியவை அறிவற்றவை. இப்படி அவை தென்படுவதைக் காரணமாகக்கொண்டு நாம் அவைகளைச் சேதநர்களென்றும் அசேதநங்களென்றும் வ்யவஹரிக்கின்றோம். இதை நாம் சற்று ஊன்றிப் பார்த்தால் இன்னும் ஒரு ஸூக்ஷ்மம் விளங்கும். மநுஷ்யனை நாம் அறிவுடையவனுகக் காண்கையிலும், அவனிடத்தில் தென்படும் அவனுடைய தேஹம் அறிவற்றதே. அதாவது, அவனிடத்தில் அறிவுள்ள அம்சமென்றும் அறிவற்ற அம்சமென்றும் இரண்டு அம்சங்கள் உண்டு என்று சொன்னதாயிற்று. இம்மாதிரியே இந்த ப்ரபஞ்சத்தில் அசேதநங்களென்று நம்மால் வ்யவஹரிக்கப்படும் பதார்த்தங்களெல்லாவற்றிலும் இரண்டு அம்சங்கள் உண்டு; அறிவுள்ள அம்சமாகிற ஜீவனுடைய அறிவின் ஏற்றக்குறைவினுல் மாத்திரம் நாம் மநுஷ்யன் முதலானவர்களை அறிவுள்ள சேதநர்களென்றும் கல் கட்டை முதலியவைகளை அறிவற்ற அசேதநங்களென்றும் பேசுகின்றோம்.

"யயெத³ம் யா¦ர்யதெ ஜக³த்"

[சேதநர் களாகிற ஜீவாத்மாக்களால் இந்த அசேதந பதார்த்தங்களெல்லாம் தரிக்கப்பட்டு வருகின்றன] என்றும்

ஸதெ¸ராநீநி ஸ¹ஞ்தாநி"

[இந்த ஜகத்தில் தென்படும் பூதங்களெல்லாம், சேதந வஸ்துக்கள் அசேதந வஸ்துக்கள் இவைகளுடைய சேர்க்கையாலேயே உண்டாகின்றன] என்றும் ஸ்ரீ கீதாசார்யன் உபதேசித்திருக்கின்றுன். இது ஒரு ஸூக்ஷ்மமான அர்த்தம். இவ்வுலகில் சிலர், 'மநுஷ்யன் ஒருவனே ஜீவனுடன் கூடியவன்; மற்றை பசு பக்ஷிகளுக்குள் ஜீவன் இல்லை' என்று அபிப்பிராயப்படுகிருகள். மற்றும் சிலர், 'அவை இரண்டுக்குள்ளும் ஜீவாத்மா இருக்கிறுன்; ஆனுல் ஸ்தாவ

ரங்களான மரம் முதலியவைகளில் ஜீவன்கள் இல்லை' என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் 'இவையெல்லாவற்றுக்கும் ஜீவன் உண்டு; ஆனால் கல் கட்டை முதலியவை கேவலம் அசேதநமே' என்று நினைக்கிறார்கள். நமது ஸித்தாந்தமோ வென்றால், 'சேதநம் போலவும் அசேதநம் போலவும் தோன்றும் ஸகல பதார்த்தங்களும் சேநாம்சமென்றும் அசேதநாம்ச மென்றும் இரண்டு பாகங்களையும் உடைத்தாயிருக்கின்றன. ஆனால் சிலவற்றில் சேதநாம்சத்தின் ஜ்ஞாநம் நன்கு விளங்குகின்றது, மற்றும் சிலவற்றில் அது மழுங்கி நிற்கின்றது. இப்படி நிற்பது அவையவைகளின் கர்ம விசேஷங்களைக் காரணமாக உடையது' என்று சொல்லுகின்றது.

ஜகத்தின் ஸ்ருஷ்டியைப் பற்றிப் பேசும் ச்ருதிகளில், 'பகவான் ஜீவாத்மாவைச் சரீரமாகக் கொண்டு வஸ்துக்களின் உள்ளில் ப்ரவேசித்தான். அப்படி அவன் ப்ரவேசித்த பிறகே வஸ்துக்களுக்குப் பெயரும் ரூபமும் உண்டாயின' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், ஒரு வஸ்து ஒரு பெயருடனும் ஒரு ரூபத்தினுடனும் கூடி ஒரு பதார்த்தமாகத் தென்பட்டால், அந்த வஸ்துவினிடம் அந்த வஸ்துவின் சரீரமாகிற அசேதநாம்சமொன்று, அதன் அபிமாநியாகிற ஜீவாத்மா வொன்று, இவைஇரண்டையும் சரீரமாயுடைய பரமாத்மா ஒன்று ஆக இம்மூன்று அம்சங்களும் இருக்கின்றன வென்று நாம் அறிய வேண்டும். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியே ஜீவாத்மாக்களுடைய கர்மாநுபவம் நிறைவேறும் பொருட்டன்றோ? அந்தக் கர்மங்கள் விசித்திரங்கள்; அவை பல வகைப் பட்டவை. அவையவைக்குத் தகுந்தபடி அந்தந்த ஜீவன்களுக்கு ஒவ்வொரு சரீரத்தை அசேதநமான ப்ர்க்ருதி என்னும் வஸ்துவைக் கொண்டு நிர்மாணம் செய்து அந்தந்தக் கர்மங்களின் பலத்தை அந்தந்த ஜீவன்கள் அநுபவிக்கும்படி பகவான் ஸங்கல்பிக்கிறான். அந்த ஸங்கல்ப ப்ரகாரம் ப்ரபஞ்சம் ஏற்படுகின்றதாகையால் சேதநா சேதங்களுடைய சேர்க்கையே இந்த ஸ்ருஷ்டியில் எவ்விடத்திலும் காணப்படுகின்றது.

'இவ்விதம் ஸகல பதார்த்தங்களிடத்திலும் ஜீவன் அதிஷ்டாநம் செய்து கொண்டிருக்கிறான் என்று சொல்வது கூடுமோ? நாம் உயிருடன் இருக்கும் காலத்தில் நமது தேஹத்தில் ஒரு ஜீவன் இருக்கிறான் என்பது உண்மையேயாயினும், நமது உயிர் போன பிறகும் அந்தத் தேஹத்தில் ஒரு ஜீவன் இருக்கிறான் என்று சொல்வது அஸம்பத்தமன்றோ? நிற்க, நாம் ஜீவித்திருக்கும்

காலத்தில் நம்து தேஹத்தின் அவயவங்களாகிற நகம் மயிர் மாம்ஸம் முதலிய ஒவ்வொன்றிலும், அவைகளின் ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு ஜீவன் இருந்து கொண்டா இருக்கிறான்? இது எப்படி ஸங்கதமாகும்?' என்று சிலர் ஆக்ஷேபிப்பார்கள். அவர்களுக்கு ப்ரத்யுத்தரம், 'ஜீவன்கள் கணக்கற்றவை. அவர்கள் செய்திருக்கும் கர்மங்கள் விசித்ரங்கள். இக்த ஸ்திதியில் எம்மாதிரியான ஸ்ருஷ்டியை அஸம்பாவிதமென்று நாம் நினைக்கக்கூடும்? நாம் நமது கர்மத்துக்குத் தக்கபடி மற்றவர்களுக்கு ஸேவகர்களாகவும் ஸ்வாமிகளாகவும் சிற்சில காலங்களில் இருப்பது போல, நம்முடைய தேஹத்திற்கு அதிஷ்டாதாவாக இருக்கிற ஜீவனுக்குப் பராதீநர்களாக வேறு ஜீவன்கள் நமது தேஹத்தின் அவயவங்களில் அதிஷ்டாநம் செய்து கொண்டு இருப்பதில் அநுபபத்தி ஒன்றும் தெரியவில்லை' என்பது தான்.

'ததோ ஹி ஶைலாப்தி தராதிபேதாந்
ஜாநீஹி விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி''

[மலை ஸமுத்ரம் பூமி இவை யெல்லாவற்றிலும் ஜீவன்கள் வழியாக ப்ரஹ்மத்தின் ப்ரவேசம் இருக்கின்றது என்று அறிய வேண்டும்] என்று புராணங்களில் கல் கட்டை முதலியவைகளுக்கு ஜீவாதிஷ்டாநம் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? ஸ்ரீ பாஷ்யகாரரும், ப்ரபஞ்சத்திற்கு ஜீவத்வாரா ப்ரஹ்மாத்மகத்வத்தை விவரித்து வருமிடத்தில்,

"ஏதே தேவா மநுஷ்யா யக்ஷா ராக்ஷஸா: பஶவ:
ம்ருகா: பக்ஷீ வ்ருக்ஷா லதா காஷ்டம் ஶிலா த்ருணம் கட:
பட இத்யாதய: தத்தத்வாச்யதயா ப்ரதீயமாந தத்தத்ஸம்ஸ்தாந
வஸ்துமுகேந தததிஷ்டாநஜீவ தததந்தர்யாமி பரமாத்மபர்யந்த
ஸ்ய ஸங்காதஸ்யைவ வாசகா இதி''

[ஆகையால், தேவன் மநுஷ்யன் கல் கட்டை முதலிய சப்தங்களெல்லாம், அந்தந்தச் சப்தத்தால் தோற்றப்படும் அந்தந்த வஸ்துவின் வழியாக அந்தந்த வஸ்துவின் உள்ளிருக்கும் ஜீவாத்மா அந்த ஜீவனுக்குள்ளிருக்கும் அந்தர்யாமி இவர்கள் வரையிலான எல்லாரையுமே குறிக்கின்றன] என்று அநுக்ரஹித்திருக்கிறார். இந்த ஸூக்திக்கு வ்யாக்யாநம் செய்திருக்கும் ஸ்ரீ ஸுதர்சநாசார்யரும் தமது தாத்பர்ய தீபிகையில்,

“𑌕𑌾𑌷𑍍𑌠𑌂 𑌛𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌦𑌿—𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍋 𑌹𑌿 𑌕𑌾𑌷𑍍𑌠𑌮𑍍।
𑌤𑌤𑍍𑌰 𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍃𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌵𑌦𑍇𑌵 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌵𑌸𑍍𑌥𑌾
𑌯𑌾𑌮𑌪𑌿 𑌜𑍀𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤 𑌏𑌵, 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌹𑌃”;

[மரம் வெட்டுப்பட்டால், வெட்டப்பட்ட துண்டுக்குக் காஷ்டம் என்று பெயர். மரமாக இருந்த காலத்தில் அதில் அதிஷ்டானம் செய்து வந்த ஜீவன், அது வெட்டப்பட்ட பிறகு அதை விட்டு விலகி விட்ட போதிலும், கட்டையாக இருக்கும் காலத்திலும் அதை அதிஷ்டானம் செய்து கொண்டிருக்கும் ஜீவன் ஒருவன் அதை விட்டு விலகாமலே இருக்கிறான். அப்படி அதில் ஒரு ஜீவன் இராவிட்டால் அதற்குப் பெயரும் ரூபமும் ஸம்பவிக்க மாட்டாதன்றோ?] என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார். ஆகையால், பெயர் ரூபம் இவையுள்ள பதார்த்தங்கள் எல்லாவற்றிலும் ஜீவன் அதிஷ்டானம் செய்துகொண்டிருக்கிறான் என்பது தான் வைதிக ஸித்தாந்தமாகும்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமமூர்த்தியின் குண விசேஷங்கள்

ஸ்ரீராம மூர்த்தியை அவதார புருஷனாக நம்பாதவர்களும் கூட ஸ்ரீராமரின் குணங்களை வெகுவாகக் கொண்டாடுகிறார்கள் என்று முன்னொரு தடவை சொல்லியிருக்கிறோம். அவரிடம் அப்படிப் பட்ட பெருமை பொருந்திய நற்குணங்கள் யாவை என்று சிறிது விசாரிப்போம். “ராமோ ராமயதாம் வர:” என்கிறபடி, எந்தெந்த மாதிரியாய் ஒருவனுக்கு மற்றொருவனிடத்தில் ரமிக்கும்படியான குணங்கள் இருக்கக் கூடுமோ, அவை எல்லாம் ராமனிடத்தில் அமைந்திருந்தன என்று சொல்லலாம். அஃது எவ்வாறு பொருந்தும் என்பதற்கு ஒரு விதமாய் ஸமாதானம் கூறுகிறேன். ஸ்ரீராமாஷ்டோத்தரத்தை நாம் எல்லோரும் கேட்டதுண்டு; அதை அடிக்கடி பாராயணம் பண்ணுவதும், அந்த நாமாக்களைக்கொண்டு வீட்டிலும் கோயில்களிலும் பூஜித்து வருவது முண்டு. அவை மஹர்ஷிகளால் இயற்றப்பெற்றவை என்பதும் நமக்கு நன்றாய்த்

தெரியும். இவைகளைக் கொண்டு நாம் ஸ்வாமியை அர்ச்சித்து வரும் பக்ஷத்தில் ஸ்ரீராம ஸாந்நித்யமும் ஸ்ரீராம ப்ரஸாதமும் கிடைக்கு மென்று நாம் முற்றிலும் நம்புகிறோம்; அவ்வாறே கிடைக்கவும் கிடைக்கிறது. இதே மாதிரியாகத்தான் ஸ்ரீராம ஸஹஸ்ர நாமமும் வழங்கி வருகிறது. இதன் ரஹஸ்யம் என்னவென்றால்: ஸ்ரீராமரை ஸாக்ஷாத்கரிக்கத் தகுந்த நாமாக்கள் இவைகளில் அமைந்திருக்கின் றன என்பதே. அவைகளை ஸ்மரிப்பதால் ஸ்ரீராம மூர்த்தியின் ரூப மும் குணமும் நம்முடைய மனத்தில் படிந்து நமக்குப் பக்தியை ஊட்டுவதுடன், ரஹஸ்யமான சில மந்த்ராக்ஷர உச்சாரணங்கள் ஐஹிகாமுஷ்மிக பலங்களை நமக்குத் தருகின்றன. அந்த நாமாக் களைச் சிறிது கவனிப்போம். அஷ்டோத்தரத்தை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது, ஸ்ரீராமர் பரமாத்மா என்று எடுத்துரைக்கும் நாமாக்கள் ஏறக்குறைய 35–இருக்கின்றன. ஆஸ்திகர்களான நாம் அவரை ரகுவீர பரப்ரம்ஹ மென்றே உபாஸிப்பதால் இத்தனை நாமாக்கள் இருப்பது சரிதான். பிறகு அவருடைய ரூப ஸௌந்தர் யத்தை வர்ணிக்கும் நாமாக்கள் ஏறக்குறைய 12–இருந்து வருகின் றன. ஸ்ரீராமருடைய அழகைப்பற்றி வர்ணிக்காத கவிகளும் ஆழ் வார்களும் கிடையா. அந்தத் திவ்யமங்கள விக்ரஹ ஸ்மரணையினு லேயே பாபங்கள் நசித்து பரம ச்ரேயஸ் வரும் என்று அவர்கள் பாடியும் எழுதியும் இருக்கிறார்கள். அப்படியே இந்த அஷ்டோத் தரத்திலும் நாமாக்கள் இருந்து வருகின்றன. பிறகு, அவருடைய ஔதார்யாதி குணங்கள்ஏறக்குறைய 20–நாமாக்களில் அடங்கியிருக் கின்றன. இவை முக்யமாய்க் கௌதம ஸூத்ரத்தில் கூறிய ஆத்ம குணங்களும் உத்தம சக்ரவர்த்திக்குரிய விசேஷ குணங்களுமே யாகும். இம் மூன்றுவகை குணங்கள்தாம் நம்மை ஸ்ரீராமனிடத்தில் இழுக்கின்றன. அம்மூவகைக் குணங்களாலும் இழுக்கப்படுகிற வர்கள் சிலர். இரண்டொரு குணங்களால் பண்டைக்காலத்தில் இருந்த இழுக்கப்படுவோர் மற்றும் சிலர். ஆனால் இந்த நாள்களில் போல் இல்லாமல், மஹருஷிகளும் ஆழ்வார்களும் இன்னும் மற்ற கவிச்சக்ரவர்த்திகளும் இந்த மூன்று வகைக்குணங்களும் பரமாத்மா வின் ஆவிர்ப் பாவங்களென்றே கொண்டாடி வருகிறார்கள். ஸ்ரீராம ரின் திருமேனி அவர்களுக்குச் சித்ர சாலையில் பார்க்கும் சிலைகளைப் போல் அன்றி, அவரது ஒவ்வொரு அங்கமும் அவர்களுக்கு தேவ தாத்யோதக மாகவே தோன்றினதுபோலும். எல்லா மநுஷ்யர்களி டத்திலும் ஒவ்வொரு அங்கத்தினிடத்திலும் தேவதைகள் இருப்ப தாயும், அவைகள் அங்கங்கே திரோபூதமா யிருப்பதாயும், வேத

மார்க்கைக நிஷ்டர்களிடத்தில் அவைகள் ப்ரத்யக்ஷமாய்த் தெரியு மென்றும் கீழ் வருமாறு புராணங்கள் கூறுகின்றன.

“வேதமார்கைகநிஷ்டாநாம் விஶிஷ்டாநாம் து விக்ரஹே ।
தேவதாநுக்ரஹதோ ஹ்யஸ்தி ஸித்தா ந ப்ராக்ருதாத்மநா ॥
யதா ராஜாத்மஜாநாம் து ஶரீரே ஸர்வதேவதா: ।
திஷ்டந்த்யநுக்ரஹபரா நித்யம் வஸந்தே ஸந்நிஹிதா: ॥
ஏவம் ப்ரத்யக்ஷமேவம் ச வர்ணயேத்தேவதாத்மநா ।
தேவதாநுக்ரஹ: ஸம்யக் த்ருஶ்யதே ஸர்வஸம்ஶய: ॥”

ஆகையால் அவதார புருஷனன ஸ்ரீராம மூர்த்தியின் சரீரம் அப்ராக்ருதமான சரீர மென்றும் தேவதாமய மென்றுமே முன்னோர் க்ரஹித்து வந்தார்கள். ஆகையால் தான் அவர்களின் பக்தி க்ரந்தங்களில் ரூப ஸௌந்தர்யமும் அங்க ப்ரத்யங்க வர்ணனைகளும் நிறைந்திருக்கின்றன.

மற்றொரு வகுப்பில் ஆத்ம குணங்களை முக்யமாய் எடுத்துரைத்திருக்கிறார்கள். அவை எல்லாருக்கும் பொது. அவை, “அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம்” முதலானவை. “யஸ்யைதே சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரா அஷ்டாவாத்மகுணா: ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸலோகதாம் ஜயதி ।” என்று சொல்லியவை பூர்ணமாய் ஸ்ரீராமரிடத்தில் நிறைந்திருக்கின்றன. இவைகளைத் தவிர, இன்னமும் அருமையான விசேஷ குணங்கள் சில அவரிடம் இருக்கின்றன. அவைதாம் ராமாவதாரத்திற்கு மஹிமையைக் கொடுக்கின்றன. அவையில்லாத பக்ஷத்தில் ஸ்ரீராமருக்கும் இக்ஷ்வாகு வம்சத்தில் ஜனித்த மற்ற ராஜகுமாரர்களுக்கும் பேதமே இல்லாமல் போய் விடும். எப்படியானால் மாந்தாதா, ஸகரர், பகீரதர் முதலியோர் ஒவ்வொரு குண விசேஷங்களைக்கொண்டு பெருமை அடைந்தார்களோ அதே மாதிரியான குண விசேஷங்கள் ஸ்ரீராமரிடத்தில் சில உண்டு. அவைகளில் முக்யமானவை பித்ருவாக்ய பரிபாலநம், சரணாகத வாத்ஸல்யம், ஏகபத்நீ வ்ரதம், துஷ்டநிக்ரஹம் முதலியவை. இவைகளும் எல்லாருக்கும் பொது வென்றபோதிலும், ஸ்ரீராமர் இவைகளை விசேஷமாய் அநுஷ்டித்து; இக்குணங்களின் கௌரவத்தையும் தர்ம ரஹஸ்யத்தையும் காட்டி உலகத்திற்குத் தெரியும்படி செய்தார்.

ஸ்ரீராமர் வேதமார்க்க நிஷ்டரென்றும் “ஸத்யம் வத” என்கிற விதி தவறாதவர் என்பதையும் முன்னமே எடுத்து

காட்டியுள்ளோம். இப்பொழுது அவர், "ஶ்ருத்யைவ ச, ஸ்ம்ருத்யைவ ச, ஸதாசாரேணைவ ச" என்பவைகளை எல்லாரையும் போல் அநுஷ்டிப்பதோடு ஸமயம் வந்தபோது அந்த வேதவாக்யத்தை எவ்விதமாகக் கௌரவித்தார் என்பதையும் அயோத்யா காண்டத்தில் மஹர்ஷி தெரிவித்திருக்கிறபடி எடுத்துக் கரட்டுவோம்.

அயோத்தியா காண்ட சரித்ரம் எல்லாருக்கும் தெரிந்ததே. ஸ்ரீராம மூர்த்திக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வதாய் நிச்சயித்து, வஸிஷ்டரைக் கொண்டு ஸ்ரீராமனுக்கும் ஸீதாதேவிக்கும் பூர்வாங்கமாக விதிப்படி உபவாஸ வ்ரதத்தைத் தசரதர் செய்வித்தார். அன்று ராத்ரி தசரதர் கைகேயியின் அந்தப்புரத்துக்குச் சென்றதும் அங்குப் பல ஸம்பாஷணைகள் நடைபெற்றன. ஸ்ரீராமரும், "ஸுஹ்ருத்பிர் ஸ்நிக்தாசாரைஸ் ஸஹாஸீந: ப்ரியம்வதை:" என்று தம்முடைய நண்பர்களுடன் ஸம்பாஷணை செய்து கொண்டு இருந்தார். 'ஹ்ருஷ்டநாரீநராயுதம்" என்று ராமன் க்ருஹம் குதூஹல மடைந்திருந்தது. மறுநாள் காலையில் ஸ்ரீராமரைக் காயகர்கள் மங்கள வாத்யங்களோடு எழுப்புகிருர்கள். ப்ராத: காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துக்கொண்டு ராமன் தயாரா யிருக்கும்பொழுது அவரை ஸுமந்த்ரர் வந்தழைக்க, அவர் ஸீதாதேவியினிடம் தெரிவித்துவிட்டு, அலங்கரிக்கப்பட்டிருக்கும் ராஜ மார்க்கத்தில் ஜநங்ளின் குதூஹலத்தையும் கவனித்துக் கொண்டு, பிதாவான தசரத சக்ரவர்த்தியின் ஸந்நிதிக்கு வந்து சேர்ந்தாரென்பதை வால்மீகி விஸ்தாரமாக எழுதி யிருக்கிருர். ஏனென்ருல்: ராஜ்ய லக்ஷ்மி என்பது ஒருவனுக்கு ஸுலபமாகக் கிடைக்கக் கூடியதல்ல; தேவதைகளும் பார்த்து ஆசைப்படக் கூடியது. அப்படிப்பட்டதையும் பார்த்துப் பரிஹாரம் செய்தார் என்ருல் ஸ்ரீராமன் குணம் எத்தன்மையது என்று யோசித்துப் பாருங்கள். அதையேதான் வ்யாஸர்,

"த்யக்த்வா ஸுதுஸ்த்யஜ ஸுரேப்ஸித ராஜ்யலக்ஷ்மீம்
தர்மிஷ்ட ஆர்யவசஸா யதகாதரண்யம்"

என்று கொண்டாடி யிருக்கிருர். இதையேதான் ஸ்ரீராமரின் கௌரவத்திற்கு முக்ய காரணமாகச் சொல்லலாம். அன்று காலை ஸ்ரீராமரின் மனம் எவ்விதமான குதூஹலத்தோடு இருக்கக் கூடுமென்று நாம் சிறிது யோசிக்கலாம். ஆனல் அவ்விதமாக அவர்மநஸ் இருந்ததா இல்லையா என்று பிறகு தீர்மானிப்போம்.

கைகேயீ, ஸ்ரீராமரிடம் சக்ரவர்த்தியின் அபிப்ராய மென்று சொன்ன வார்த்தைகளை விஸ்தரிக்க வேண்டியதில்லை. அவைகளை ராமர் எப்படி அங்கீகரித்தார் என்பதை மாத்ரம் கவனிப்போம்.

'இதீவ தஸ்யாம் பருஷம் வதந்த்யாம்
ந சைவ ராம: ப்ரவிவேச சோகம்''

என்று ராமர் சோகமடையவில்லை என்று அந்த சுலோகத்தில் மஹர்ஷி முடித்து விட்டார். உடனே,

"ஏவமஸ்து கமிஷ்யாமி வநம் வஸ்துமஹம் த்வித:''

என்று 'அப்படியே இருக்கட்டும்; இப்பொழுதே வநம் போகிறேன்' என்று சொன்னதாகவும் எழுதுகிறார். அதற்குப் பிறகுதான் தகப்பனார் ஏனிப்படி உத்தரவளித்தா ரென்பதையும் கேட்கிறார்.

இந்த இடத்தில் தான் சிறிது யோசிக்கவேண்டியதா யிருக்கிறது. சோக மென்பது ப்ரியமான பதார்த்தத்தை விட்டு பிரிவதால் உண்டாவது. அதை அடைய வில்லை என்றால், அவருக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகத்தில் ஆசை கிடையாதா? அல்லது அபிலாஷை யிருந்தும் பிதுருவாக்ய பரிபாலநம் என்னும் தர்மத்தால் சோகம் வரவில்லையா? தர்மாசரண மென்னும் ஸந்தோஷம் யுவராஜ்யாபிஷேகத்தைக் காட்டிலு மதிகமாய், அதை நினைக்க ஒட்டாமல் செய்து விட்டதா? இந்தக் கேள்விகளுக்குச் சரியான ஸமாதாநம் கிடைத்தால் ஸ்ரீராமனுடைய பெருமை நன்றாய் விளங்கும். மஹர்ஷியோ கதையை நடந்தது நடந்தபடி எழுதியிருக்கிறாரே தவிர இவற்றைச் சர்ச்சை செய்ய வில்லை. ஆனால் அந்தச் சர்ச்சைக்கு ஸமாதாநம் மாத்ரம் வேண்டிய அளவு ஸூசனை செய்து போயிருக்கிறார். முதலில், தசரதரும் ப்ரஜைகளும் பத்நிகளும் ராமருடைய அந்த:புர ஜநங்களும் குதூஹல மடைந்து கொண்டாடினரென்று விஸ்தாரமாக மஹர்ஷி வர்ணித்திருக்கிறார். ஸ்ரீராமர் குதூஹல மடைந்து இருப்பதை அவர் விஸ்தரிக்கவே இல்லை. பிதுருவாக்ய பரிபாலநம் என்னும் தர்மம் அநுஷ்டிப்பதை ராமர் அங்கீகரித்த போதிலும் ராஜ்யத்திலும் அதனால் கிடைக்கும் மர்யாதைகளிலும் அவருக்கு அதிக ப்ரிய மிருக்கும் பக்ஷத்தில் சோகம் கொஞ்சமேனும் வராமலிராது. ஆனால், ஸ்ரீராமன் ஜநகரைப்போல் 'மிதிலா நகர மெரிந்தாலும் என்னுடையது ஒன்றும் போக வில்லை' என்றதுபோல் இருந்து வந்தாரோ? அப்படி இல்லை என்றும் தெரிய வருகிறது.

"யாாயநு உநஸா உ॰ஃவ ஶிஜி பாணி நிஶ௫ஹுவ"
என்று மனஸ்ஸினாலே துக்கத்தையும் தடுத்துக்கொண்ட தாகச் சொல்கிறார் மஹர்ஷி.

"ந வாஸ உஹதீம் ஶ்ஜக்ஷ்ம் ராஜ்ய நாஶோவகஷி-தி"
என்று ராஜ்ய நாசமானது அவருடைய அழகைக் குறைக்கவில்லை என்கிறார். அயோத்யா காண்டத்தில் இந்த விஷயத்தைக் குறிக்கும் 19-வது சர்க்கம் மிகவும் முக்யயமான தென்றே சொல்ல வேண்டும். சோகமடையாமலும் முகம் வாடாமலும் அவர் தமது தாயார் வீட்டுக்குப் போகும் போது, தாம் துக்கத்தை அடக்கிக் கொண்டதாகவும் எழுதுகிறார். ஆகையால் ப்ராக்ருதர்கள் போல் அவருக்கு ஸந்தோஷ காலத்தில் அதிக ஸந்தோஷமும் துக்க காலத்தில் அதிக துக்கமும் கிடையாது, பரம நிவ்ருத்தியும் அடைந்தவரல்லர். க்ஷத்யருக்கு ராஜ்ய பரிபாலநம் தாமம். ஸந்த்யாவந்தநாதிகள் எவ்விதமாய் த்விஜர்களுக்கு அபரித்யாஜ்யமோ அதைப்போலவே ராஜ்ய பரிபாலநமும் க்ஷத்திரியர்களுக்குத் தர்மம். அவ்விதமான ஒழுங்கான பரிபாலநம் 'ஸுஹஸ யூக உண ஶிவாத வத்ரும்" என்கிறபடி சில ஸௌகர்யங்களையும் கொடுக்கும், ஆகையால் தர்மாசரணமாய் அங்கீகரித்த ராஜ்யபாலநம் ஸுகத்தையும் கொடுக்கும். ஆனால் அந்த ஸுகத்தில் ஆசைகொண்டு தர்மத்தை விட்டு விடக்கூடா தென்பதையும், வைதிகமான விதியை மீறி மற்ற விதிகளுக்கு இடமில்லை என்பதையும் காட்டுமாறு ஸ்ரீராமன்,

"நாஹமயவஶோ ஷெவி லொகஊவஸு உஹெ।
விஜி ஊஷிஹி ஹுஷும் கெவலும் யஊஸிதம்॥" என்கிறார்.

[அதாவது: நான் அர்த்த ப்ரனல்லன்; தர்மநிரதன். ஸீதா தேவியும் ஹநுமாரிடத்தில் "யஊவஷெஶா தூஜகஜ ராஜும்" என்று வருத்தத்துடன் சொல்லுகிறாள்.

பவபூதியும் இந்த அபிப்ராயத்தைக் கொண்டே உத்தர ராம சரித்ரத்தில்;

'ஷேஹம் தயாம்வ ஸௌவும்வ யஷிவா ஜாநகீமவி।
ஆராயநாய லொகஸு ஃவதொ நாஹி மெவுமா॥" என்றார்.
ஸ்நேஹம் தயை, ஸௌக்யம் அல்லது ஸீதை, இவர்களை தேசத்தின் ஆராதநத்திற்காகப் பரித்யாகம் பண்ணுவதில் எனக்கு மனக்லேசம் கிடையாதென்று ஸ்ரீராமன் சொல்லும்படி செய்கிறார்.

இந்த உத்தம குணம்தான் ஸ்ரீராமனிடத்தில் மிகவும் சிறந்த தென்று சொல்லவேண்டும். ஆபஸ்தம்பர் தர்ம ஸூத்ரத்தில், தர்மத்திலிருந்து அர்த்தமும் அர்த்தத்திலிருந்து, காமமேதவிர, காமத்திலிருந்து அர்த்தம் உண்டாயிற்றென்பது தப்பென்றும், க்ஷத்ரியர்கள் ராஜ்ய பரிபாலநத்தைத் தர்மமுறையிலேயே செய்யவேண்டியதென்றும், விதிகளுக்குள்ளே வேத விதிக்குத்தான் ப்ராதாந்யமென்றும் கூறியிருக்கிறார். ராமன் பதிநான்கு வருஷகாலத்திலேயும் ராஜ்யம் போய்விட்டதே என்று கவலையடையாமல், க்ஷத்ரிய தர்மங்களை வநவாஸியாய் அநுஷ்டித்துக் கொண்டு, சிஷ்டபரிபாலந துஷ்ட நிக்ரசஹறதிகளைச் செய்துவந்தார் என்பதே ஸ்ரீராம மூர்த்தியின் பரமோத்க்ருஷ்டமான குணம்.

ஏ. நடராஜையர்.

ஓம் தத்ஸத்

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்

"ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி" என்னும் ஒரு புஸ்தகம் நாம் வரப்பெற்றோம். இது திருமலராஜபுரம் ஜமீன்தாராகிய ப்ரஹ்மஸ்ரீ நே. ஈ. வேங்கடேச சர்மாவால் இயற்றப்பெற்று, சென்னை ஸ்ரீ ஆதிமூலம் அச்சுக்கூடத்தில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூ. 5—0—0, "ஸ்ரீமாந். நே. ஈ. துரைஸ்வாமி ஐயங்கார், மானேஜர், ப்ரஹ்ம ஸாயுஜ்ய லைப்ரெரி, குத்தம்பாக்கம் போஸ்ட், வயா பூந்தமல்லி, செங்கற்பட்டு ஜில்லா" என்னும் இடத்தில் இது க்ரயத்திற்கு அகப்படும்.

இதில் ஸம்ஸ்க்ருத பதங்கள் அகாராதியாக க்ரந்த லிபியில் எழுதப்பெற்று, அப்படி எழுதப்பட்ட ஒவ்வொரு பதத்திற்கும் தமிழில் அர்த்தமும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் புஸ்தகம், முக்கியமாகத் தர்க்கம் வ்யாகரணம் முதலிய சாஸ்த்ரங்களைப் படிக்கும் வித்யார்த்திகளுக்கு உபயோகப்படவேண்டும் என்னும் கருத்துடனே எழுதப்பட்டிருப்பதால், அம்மாதிரி சாஸ்த்ர நூல்களில் ப்ரயோகம் செய்யப்படும் பதங்களே விசேஷமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஸாமாந்யமாகக் காவ்யம் நாடகம் முதலியவைகளில் காணப்படும் பதங்கள் அவ்வளவாக எடுக்கப்படவில்லை. பதங்களுக்கு அர்த்தம் எழுதப்படுகையில், அவைகளின் ப்ரயோகமும் ஆங்காங்கு எடுத்துக் காட்டப் பட்டிருப்பதுடன், சில கடிந பதங்களுக்கு நிருக்தியும், தாதுக்களுக்கு அர்த்தமும், கண பத விபாகங்களும், வேறு சில வ்யாகரண விசேஷங்களும் எழுதப்பட்டிருகின்றன. ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வித்யார்த்திகளுக்கு இது உபகாரமாக இருக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் அச்சுப் பதிப்பு ஸம்பந்தப்பட்ட வரையில், இக்காலத்தில் பாஷாந்தரங்களில் வெளிவரும் புஸ்தகங்களைப் பார்க்கும் கண்களுக்கு, இது அநேக அம்சங்களில் ப்ரியமாக இல்லை என்பதை நாம் கூறவேண்டியதாக இருக்கிறது.

கடிதங்கள்

(1)

மதுரை ஸபை.

விஞ்யாபனம்:—

சென்ற ஆவணிமீ த்தில் மதுரையில் நடந்த ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபையின் சில விஷயங்களைத் தெரிவிக்கும் தமிழ் வித்வான் இடாம்பி திருமலை அய்யங்கார் என்று கை ஒப்பமிட்ட ஓர் அச்சு பத்திரிகை சில நாள் முன் தபால் மூலமாக நமக்குக் கிடைத்தது. அதில் ஸபையில் நடந்த அவசிய விஷயங்கள் எழுதப்பட்டிருப்பதுடன், வீணான கலஹத்தை உண்டு பண்ணக்கூடிய சில வார்த்தைகளும் எழுதப் பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட துண்டு பத்திரிகைகள் சில நாளாய் வ்ருத்தியடைந்து வருவதனாலேயே வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வீணான கலகங்களும் த்வேஷங்களும் மற்றும் வ்யர்த்தமான செலவுகளும் வ்ருத்தியடைந்து வருகின்றன வென்று அனேகம் புத்திமான்களான ப்ராமாணிகர்கள் சொல்வதை நாம் பலதடவை கேட்டிருக்கிறோம்.

ஆனால், இவ்விபரீத விஷயத்தை அனாதரித் திருக்கவேண்டியதே விவேகிகளுடைய க்ருத்ய மாக விருந்தும், வாஸ்தவமான விஷயத்தைத் தெரிவிக்காவிட்டால் "அஸத்யமேவ ஸத்யம் பவதி" என்கிற நியாயத்தினால் அஸத்யமே ஸத்யமாக விளங்கி விடுகிற படியால் இவ்விஷயத்தி ஆஸ்தையில்லாத நாமும் ப்ரவர்த்திக்க வேண்டியது அவச்யமாய் நேர்ந்திருக்கிறது.

மதுரை ஸபையில் நடந்த வாஸ்தவமான விஷயமாவது:—

நமது கீதாஸார உபந்யாஸம் முடிந்தவுடன் ஸபையின் அக்ராஸனாதிபதியான ஸ்ரீமான். வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் முதலியவர்களைப்பார்த்து, 'இது வேதாந்த தேசிக பக்தஸபை; ஆகையினால் ஸ்ரீவேதாந்த தேசிகனை பற்றியாவது அவருடைய ஸ்ரீஸூக்திகளைப் பற்றியாவது ஒருவர் இல்லாத தோஷங்களைச் சொல்லி தூஷித்தால் அதற்கு ஸமாதானம் செய்ய இந்த ஸபை கடமைப் பட்டதாகுமன்றோ? காஞ்சி ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி நம் தேசிகனைப் பற்றியும் அவரது ஸ்ரீஸூக்திகளைப் பற்றியும் பலவாறாக தூஷித்து அச்சிட்டு வெளிப்படுத்தி வருவதை யாவரும் அறிந்திருக்கலாம். ஆனால் நாம் இங்கு அதற்கு பதிலாக ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியையாவது அவருடைய கிரந்தங்களையாவது தூஷிக்க ப்ரயத்நப்படவில்லை. அவர் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளின் மேல் சொல்லியிருக்கும் தூஷணங்கள் பொருந்ாதவை யாதலால் அவை சரியானவை யல்ல என்கிற ஓர் விஷயத்தை மட்டும், அதற்கு வேண்டிய ஸரியான காரணங்களோடு இப்பொழுது தெரிவிக்கிறேன்' என்று யாவரு மறிய விஜ்ஞாபநம் செய்து கொண்டேன். அவர்களுடைய அநுமதியின் பேரில் நான் சொன்னதாவது:—

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகளின் பேரில் அவர் செய்திருக்கும் தூஷணங்கள் அநந்தங்களாக விருப்பதால் எல்லாவற்றையும் சொல்வதற்கு காலமில்லை ஆகையினால் இங்கு இரண்டொரு விஷயத்தை மட்டும், உதாஹரிக்கிறேன்;

“ஸ்ரீ தேசிகன் ஸச் சரித்ர ரக்ஷையில் சப்த சாஸ்த்ரம் அறிந்தவர்கள் பரிஹஸிக்கும்படி எழுதி யிருக்கிறார்’ என்று ஓர் சப்த தூஷணத்தை இவர் பாதுகா ஸஹஸ்ராவதாரதத்துவத்தில் எழுதி யிருக்கிறார். ‘ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் ஒற்றைப்பட்ட நமஸ்காரம் செய்யக் கூடாதென்று அருளிச் செய்திருப்பதற்கு விருத்தமாக ஒற்றை நமஸ்காரம் செய்வது தான் சரி என்று ஸ்தோத்ர பாஷ்ய வாக்யங்களினால் ஏற்படுகின்றது’ என்று நமஸ்கார தத்வத்தில் எழுதி யிருக்கிறார். இவற்றுள் முதல் விஷயம். வ்யாகரண சாஸ்த்ர விருத்த மல்ல என்பதையும் இரண்டாவதான ஸ்தோத்ர பாஷ்ய வாக்யங்களுக்கு இவர் எழுதியிருக்கிற அர்த்தம் ப்ரகரணத்துக்குப் பொருந்தாது என்பதையும், பொருந்திய வேறு அர்த்தம் எது என்பதையும் ஷை ஸபையில் யாவரும் அறியும் படி ப்ரமாணங்களோடுப் பரக்க நிரூபித்தோம். அங்கிருந்த யாவரும் நாம் சொன்ன விஷயத்தை ப்ராமாணிகம் என்று அங்கீகரித்தார்கள்.

இதன் நடுவில் ‘காஞ்சி அண்ணங்கராசாரியர் ஸ்வாமியை நேரில் வரவழைத்து இவ்விஷயத்தில் வாக்யார்த்தம் செய்விக்கலாமா?’ என்று ஒருவர் கேட்டதற்கு ‘உலகத்தில் வாதி ப்ரதிவாதிகள் தங்கள் தங்கள் கக்ஷியையே பிடிவாதமாகச் சரியென்று சொன்னால் இது சரி இது சரியல்ல என்பதை மத்யஸ்தர்களான பண்டிதர்கள் மூலமாகவே நாம் தீர்மானிக்கவேண்டும். அப்படிப்பட்ட மத்யஸ்தர்களான பல பண்டிதர்களிடம் ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் தேசிகஸூக்திகளின் பேரில் எழுதி அச்சிட்டிருக்கும் தூஷணங்களை நேரில் காட்டி அதற்கு யான் சொல்லும் ஸமாதானங்களையும் நேரில் தெரிவிக்கிறேன். மத்யஸ்தர்கள் நாம் சொல்லும் ஸமாதானங்களை சரியான தென் றங்கீகரித்தால் போதாதா?’ என்றும், ‘மன்னார் குடியில் ஷை யாரோடு நடந்த வாக்யார்த்தத்தில் வாதி ப்ரதிவாதிகள் இருவரும் தாங்களே ஜயித்து விட்டதாக எழுதி பத்ரிகை போட்டிருக்கிறார்கள். ஆகையினால் அநேக வித்வான்கள் அங்கீகரிப்பதே போதுமானது,’ என்றும் சொல்லி விட்டு ‘நேரில் வாக்யார்த்தம் சொல்ல வேண்டு மென்று ஆஸ்தையிருந்தால் அதற்கும் எந்த ஸமயத்திலும் தயாராயிருக்கிறோம்’ என்றும் சொன்னோம்.

ஸபை கலைந்து வருகையில் ‘ஹரிஸமயதிவாகரம்’ பத்ராதிபர் நேரில் கண்டு ‘ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியை வரவழைத்தால் வாக்யார்த்தம் நடத்தலாமா’ என்று கேட்டதற்கும், ‘அவச்யம் அப்படியே நடத்துகிறது. அதில் ஆக்ஷேபமேயில்லை’ என்று சொல்லி விட்டு, பிறகு ‘ஜயபரா ஜயங்களில் ஆஸ்தையிருந்தாலன்றோ அவரை நேரில் வரவழைத்து வாக்யார்த்தம் சொல்லவேண்டும். எனக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களோடு ஜயபராஜயத்தில் ஆஸ்தையில்லை; நீரே சாஸ்திரங்களையும் வாசித்து ஸம்ப்ரதாயங்களும் தெரிந்தவராகவிருப்பதால் இப்பொழுதே உம்மோடு அந்த வாக்யார்த்தத்தைச் சொல்லத் தயாராக விருக்கிறேன். அல்லது மற்றும் எவர் சொன்னாலும் சரி; தத்வநிர்ணயம் செய்ய வேண்டியது தானே நமக்கு அவச்யம். அதை எந்தப்பண்டிதர் செய்தாலென்ன?’ என்று நாம் பதில் சொன்னதற்கு அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் போய்விட்டார்.

இந்த விஷயங்களெல்லாம் அங்கு வந்திருந்த அநேக பண்டிதர்கள் ப்ரபுக்கள் சமீபத்தில் நடந்தனவே. வஸ்து ஸ்திதி இப்படியிருக்க ஸ்ரீமான் திருமலை அய்யங்கார் நோட்டீஸ் 3வது பக்கத்தில் தோல்வி தானமென்றும் ‘‘ஶேஷம் கோபி ந வக்துமர்ஹஸி’’ என்றும் மற்றும் வாச்யமாகவும் வ்யங்க்யமாகவும் பலபடி தூஷித்து எழுதினதைப்பற்றி வருந்துகிறோம்.

மற்றும் 2-வது பக்கத்தில் ‘ஸ்ரீமான் அண்ணங்கராச் சார்யரை தூஷிக்கவே தலைப்பட்டார்’ என்பது முதலானவைகளும் கடுகளவும் அங்கு நடக்காத விஷம்.

பிறருடய பாப பலன்களையும் சேர்த்து தாமே அனுபவிக்கும் திறமையும் ஆவ்லையு முள்ளவர்களன்றோ பிரம்ம விதப சாரத்திற்கென்றே தீக்ஷை பெற்றிருப்பது?

பரமாசார்ய தூஷணத்தைப் பரிஹரிப்பது புண்ணிய காரியமே யல்லது பர நிந்தனமான பாப மாகாது. இது நிற்க, ஓர் மகா ஸபையில் ஒருவர் மற்றொருவரை தூஷிக்கச் சொல்லி கனவான்களான அத்யக்ஷர்கள் ஸபை அங்கத்தினர்கள் யாராவது கேட்டுக் கொண்டிருப்பார்களா? அல்லது இவர் அவர்களையும் அப்ராமாணிகர்களாகச் சொல்லத் துணிவரோ? ஆகையினல்,

‘‘த்வேஷிகோ நிர்க்ருணப்ராய: ஹ்ருஷ்டஸ்த்வஹோ ஜன: |
த்வம் யாத த்வம் யோ ஸ்நேஹ நாஸ்தி நாஸ்தி ஸஹீதமெ ||’’

என்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்தபடி தேசிக பக்தியுள்ள ஸாத்விகர்களுக்கு ரஜஸ் தமஸ்ஸால் ஸம்பவிக்கும் பரநிந்தைக்கு ப்ரஸக்தி யுண்டாகாது.

கிம்பஹுநா—ஸ்ரீ மான் அண்ணங்கராசார்யர் ‘ஸ்ரீதேசிகன் சப்த வித்துகள் பரிஹ ஸிக்கும்படி எழுதி இருக்கிறார்’ என்று எழுதி இருப்பது சரியல்ல என்பதும் ஸ்தோத்ர பாஷ்யக்ரந்தத்திற்கு அர்த்தம் பண்ணி இருப்பதும் சரியல்ல என்கிற இந்த இரண்டு விஷயமே ப்ரமாணங்களோடு ஸபையில் பறக்க நிரூபிக்கப்பட்டன.

வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யன்.

(2)

ஸ்ரீ வைதிக மத தீபிகை பத்ராதிபருக்கு விண்ணப்பம்:—

சென்ற ஆவணிமீ ஸஞ்சிகையில் அடியேன் எழுதிய கதையை ஸ்வாமி கௌரவப்படுத்தி ‘‘ ஆதாராதேயங்கள் ’’ என்ற பெயரின் கீழ் ப்ரஞ்சுரஞ் செய்ததுடன் அதன் விஷயமாக ஸ்வாமி சோசநீயப்பட்டெழுதிய குறிப்பை வாசிக்குங்கால் அடியேனுக்கு மிக்க வியஸன முண்டாகிறது. ‘‘ ஆசார்ய தேவோ பவ ’’ என்றபடி, ஆசார்யனை ஒரு தெய்வமாக எண்ணியவனும், நமது முன்னோர் நமக் களித்திருக்கும் க்ரந்தங்

களின் மேன்மையையும், அவற்றைக் காலக்ஷேபஞ் செய்துவரும் பெரியோர்களின் மேன்மையையும் மந: பூர்வகமாக அறிந்திருப்பவனு மாகையால், அது விஷயத்தில், ஸ்வாமிக்கு அடியேனிடத்தில் அவநம்பிக்கை பிறவாதென்றே எண்ணுகிறேன். ஆசார்யர்களையும், பண்டிதர்களையும், பூர்வ க்ரந்தங்களையும், நிந்திப்பதும், பரிகஸிப்பதும் அடியேனுடைய நோக்கமா யிருந்தால், அந்த வ்யாசத்தை வைதிக மத தீபிகைக்கு அனுப்பியிருக்க மாட்டேன்; 'ஆனந்த விகடன்' போன்ற பத்திரிகைக்கு அளித்திருப்பேன். ஆயினும், அந்த வ்யாஸத்தில், சிறிது அழுத்தமாக ஆசார்யர்களையும், தர்க்க விசாரணை செய்வோர்களையும் குறித்து எழுத நேர்ந்ததின் தாத்பர்யம் யாதெனில்: நமது ஸித்தாந்தத்திற்குக் கடைசியில் முக்கியமான ப்ரமாணமாய் நின்றது ப்ரத்யக்ஷ ப்ரமாணமேயாகும். "வையந் தகளியும்" "அன்பே தகளியும்" ப்ரமேயமான அந்த வஸ்துவைத் திருடனைப் பிடிப்பது போலக்கையும் பிடியுமாகப் பிடித்துக் காட்டுவதற்காக ஆழ்வார்களேற்றிய தீபங்களென்றும், இக்காலத்தும், அந்தத் தீபங்களைச் சற்றுத் தூண்டிப் பார்த்தால் அத்திருடன் அகப்படுவது நிச்சயமென்றும், குறிப்பாகவும் மறைவாகவும் ஆசார்யர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டி அப்படிக்குறித்ததேயொழிய வேறன்று. ஸமீப காலத்தில் எங்கிருந்தோ, உலகம் திடுக்கிடும்படியான ஒரு சாட்டையடி விழுந்தது நாம் யாவரும் ப்ரத்யக்ஷமா யறிந்த விஷயம். அப்படிப்பட்ட சாட்டையடி கொடுக்கக்கூடிய மகாபுருஷன் யாவனென்று நம்முடைய ஆசார்யர்களும், ஸ்வாமியைப் போன்ற நம் பண்டிதர்களுமே அறியக்கூடும். கிறிஸ்து மதஸ்தர்கள் தங்கள் தெய்வத்திற்கு அத்தகைய சக்தி யில்லவே யில்லை யென்று கூறுவதுடன், அவர்களில் அநேகர் நாஸ்திக வாதிகளாயும், வேறு சிலர் அத்வைத வாதிகளாயும் ஆய்விட்ட விஷயமும், ஸ்வாமிக்குத் தெரிந்ததே. அந்தச் சாட்டையடி கேட்டது முதல் நம்முடைய தேசம் தவிக்கும் தத்தளிப்பும், ஆசார்யர்களும் மற்று முள்ள வைதிகர்கள் படும் பாடும் யாம் அறிந்த விஷயமே. எப்போது சாட்டையடி கேட்டதோ அப்போதே அத்திருடன் ஸமீபத்தில் வந்திருக்கிறானென்பதும் நம்மவர் ஊஹிக்கக்கூடியது தான். அப்படியிருக்கத் திருடனைக்கையும் பிடியுமாகப் பிடித்து ராஜாவினிடம் ஒப்புவிக்க வேண்டிய ப்ரயத்நஞ் செய்யாமே, தர்க்க விசாரணை செய்து கொண்டு காலஹரணம் செய்கிறார்களே என்று குறிப்பிட்டதேயொழிய வேறன்று. அத்திருடனும் ஸாமாந்ய திருடனல்லனென்பதும் நம்மாசார்யர்கள் அறிந்த விஷயமே. நெடுகோள் திருடனல்லவா அவன்? எப்போது கிட்ட நெருங்கியிருப்பதாகத் தெரியவருகிறதோ, அப்போதே அவன் நமது கைக்குட் சிக்குவானென்பதும் திண்ணம். தீ வர்த்திகளைச் சற்று ப்ரகாசப் படுத்திப் பார்த்தால் கட்டாயம் அவன் சேவை ஸாதிப்பான். வீணாக ஸாதுக்களையும், பேதைப் பெண்களையும் பயமுறுத்திவிட்டு, ஓடிப்போகும் பேர்வழி யல்லன், அக்கள்ளன். ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும், பூதேவியை மணப்பதற்காகவும், அவன் இக்கலியுகத்தும் வருவதுண்டல்லவா? ஆகையால் பெரியோர்கள் சற்று கவனமாக அவனைத் தேடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டை, }
2—10—33. }

S. கிருஷ்ணமாசாரியர்.

ஸ்ரீ:

ஶ்ரியை நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸபை, கும்பகோணம்.

திருக்குடந்தை என்னும் வேறு பெயருடைய கும்பகோணத்தில் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய வர்ஷோத்ஸவ காலத்தில் "ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸபை" என்று ஒரு பெரிய வித்வத் ஸதஸ் சென்ற நாற்பது வர்ஷ காலமாக நடைபெற்று வருகின்றது என்பது அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். இந்த ஸதஸ் இவ்வருஷத்திலும் மிக்க சிறப்புடன் நடத்தப்பட்டதென்றும், அநேக ஸ்ரீவைஷ்ணவ வித்வாங்கள் இந்த ஸதஸ்ஸை அலங்கரித்து, ஸ்ரீவைஷ்ணவ மதக் கொள்கைகளை நன்கு விளக்கக் கூடிய உபந்யாஸங்களால் அந்த ஸதஸ்யர்களெல்லாரையும் ஆநந்திப்பித்தார்களென்றும் கேள்விப்பட்டு நாம் மிகுந்த ஸந்தோஷத்தை அடைகின்றோம். இம்மாதிரியான ஸதஸ்ஸுக்கள் அடிக்கடி சேர்வது, பல காரணங்களால் எல்லாராலும் அவசியம் அபேக்ஷிக்கத் தகுந்ததே. பகவானிடம் நிரதிசயமான ப்ரீதியுடன் அவனுடைய யோகத்தையே விரும்பும் பக்தர்களுக்கு, அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களையும் கல்யாண குணங்களையும் பற்றியே எப்பொழுதும் பேசும் இந்த ஸதஸ்ஸுக்கள், அதிமாத்ரம் போக்யங்கள் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. குடும்ப போஷணத்திற்காக த்ரவ்யத்தை ஸம்பாதிப்பதில் மிக்க ஊக்கத்துடன் லௌகிக ப்ரவ்ருத்தி செய்துகொண்டிருக்கையிலும், பகவானிடம் பராங்முகர்களாக இராமல் இருக்கும் மற்றை ஆஸ்திகர்களுக்கும், வர்ஷத்தில் ஒரு தடவை நடைபெறும் இம்மாதிரி ஸதஸ்ஸுக்கள் மநோ விநோதநமா யிருக்குமாதலால் அவை ஒரு விதமன அமைதியைக் கொடுத்துக்கொண்டு அது வழியாக ச்ரேயஸ்கரங்களாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை. எப்பொழுதும் நல்லது தீயது என்னும் வ்யத்யாஸமின்றிக்கே ஏதாவது ஒரு ப்ரவ்ருத்தியை அவலம்பிக்கும் ஸாமாந்ய ஜநங்களுக்கும்,இவை தீயதில் செல்வதற்கு அவகாசத்தைக் கொடாமல் பகவதபிமுகமாக அவர்களைச் செலுத்துமாதலால், இச்சபைகள் அவர்களுக்கும் பரமோபகாரகமாகும் என்பதில் ஆக்ஷேபம் ஏதாவது இருக்கக் கூடுமோ? இவ்விதம் பலர்க்குப் பலவாறாகப்

பயனளிக்கும் இம்மாதிரியான ஸத்ஸங்கங்கள் மேன்மேல் அபி வ்ருத்தங்களாய்ப் பலவிடங்களில் பல விதமாய் அநுஷ்டிக்கப்பட்டு வரவேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை.

* * * * *

இவ்வருஷம் ஷெ ஸபையில் சர்ச்சிக்கப்பட்ட விஷயங்களுள் 'ஸ்ரீ தேசிக தூஷண பரிஹாரம்' என்பது ஒன்றாக இருந்தது என்று நாம் அறிகின்றோம். ஸ்ரீ தேசிகன் வ்யாகரண ஜ்ஞாநமின்றிக்குச் சில அபசப்தங்களை ப்ரயோகித் திருக்கிறார் என்று சிலர் ஸ்ரீதேசிகனைத் தூஷித்திருக் கிறாராம். அம்மாதிரியான தூஷணம் ஸ்ரீதேசிகன் மீது ஏறமாட்டா தென்றும், அவரால் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள சப்தங்களெல்லாம் ஸுசப்தங்களே தவிர அவை அபசப்தங்களல்ல வென்றும், அந்தத் தூஷணத்திற்குப் பரிஹாரங் கள் செய்யப்பட்டனவாம். ஸ்ரீ தேசிகனை ஒரு அவதார புருஷ னென்று ஒத்துக் கொள்ளாதவர்கள் கூட, அவருடைய ஜ்ஞாந ஸம் பத்தைச் சரிவர அவர்கள் உணர்ந்திருப்பார்களேயானால், அவரை வ்யாகரணம் அறியாதவரென்று ஒருகாலும் தூஷிக்கத் துணியார். அப்படி ஒருவர் துணிந்து தூஷிக்க ஆரம்பித்தால், அந்தத் தூஷ ணம் பண்டிதர்களால் அநாதரிக்கத் தகுந்ததே தவிர ஒரு ப்ரகாரத் தாலும் ஆதரிக்கத் தகுந்த தாகமாட்டாது. நிற்க, ரஜஸ்ஸாலும் தமஸ்ஸாலும் ஆக்ரமிக்கப்பட்டுள்ள இந்த ஜகத்தில் தூஷணம் என் பது எக்காலத்திலும் பரவியே நிற்கக் கண்டிருக்கிறோமன்றோ?

ஸ்ரீ தேசிக தூஷண பரிஹாரம்.

"𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌗𑍁𑌣𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌰𑌾𑌮𑍇 𑌨𑌿𑌰𑌾𑌗𑌸𑌿 𑌵𑌾𑌗𑌸𑌿

𑌹𑌰𑌣 𑌉𑌷𑌿𑌤𑌾 𑌦𑍋𑌷𑌾 𑌦𑍋𑌷𑌾 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌹𑌸𑌨𑍍𑌤𑌿 𑌕𑍋"

என்கிறபடி அளவற்ற கல்யாண குணங்களுக் கெல்லாம் இருப்பிட மாயும் எவ்வித தோஷமு மற்றவராயும் இருக்கும் ஸ்ரீராமசந்த்ர னிடத்திலேயே தூஷணைகபரர்களா யிருந்த சிலர் தோஷங்களை ஏறிட்டுப் பேசத் துணியவில்லையோ? அந்தக் காலத்திலேயே அவ் வளவு தூஷணம் பரவி யிருந்த தென்றால், இக்கலியுகத்தில் அது ஓங்கி நிற்பது ஒரு ஆச்சர்யமாகுமோ?

இந்தத் தூஷணங்கள் ஸ்வபாவத்தால் அநாதரிக்கத்தகுந்ததே யாயினும், அவை பரிஹரிக்கப்படாமல் விட்டு விடப்பட்டால் அவை சில ஸாமாந்ய ஜநங்களுக்கு மோஹத்தை உண்டு பண்ணு மாதலால், அவைகளுக்கு ஸமாதாநம் சொல்ல வேண்டியது அத்யா வசியமே. ஆனால், அதைச் சொல்லுமிடத்தில் எவ்வித ஆக்ரோசமு மின்றிக்கே பண்டிதர்கள் ப்ரவ்ருத்தித்தல் வேண்டும்.



ஸ்ரீமதே ஸ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேசிகாயநம:
ஸ்ரீமதே ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகாயநம:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:
ஸ்ரீகோதாயைநம:
ஸ்ரீயைநம:
ஸ்ரீ ஸ்ரீநிவாச பரப்ரஹ்மணேநம:

திருப்பாவை.

ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை என்கிற பகவத் விஷயம் கூடிய சரணாகதி சாஸ்திரத்தைப்பற்றி தாஸாந் பாகவத கோஷ்டிக்கி விண்ணப்பம் செய்யத் துணிந்த சில விஷயங்களை பாலனுடைய மழலைச்சொற்களை மாதா பிதாக்கள் கேட்பது போல கேட்கப்பிரார்த்திக்கிறேன்.

கோதைத் தமிழ் முப்பதையும் இந்த மார்கழிமாதத்தில் நாளொன்றுக்கு ஒருபாசுரமாகத் தனிப்படுத்தி அநுசந்தானம் பண்ணுவது ஸம்பிரதாயமாயிற்று. ஆய்பாடி கோபிகாஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனோடு செய்த விருதத்தை தானும் தன் தோழிகளுடன் அநுபவிக்க மனோபாவம் கொண்ட ஆண்டாள் ஒரே நாள் நோன்பாகவே பாவித்ததாக திருப்பாவையினால் ஏற்படுகிறது. "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" என்றதில் மாதம், திதி, கிழமை மூன்றையும் நிர்த்தாரணை செய்தாள்.

அதாவது மார்கழிமாஸத்தில் பௌர்ணமி திதி கூடிய வெள்ளிக் கிழமை என்று நிச்சயித்தாள். ஸ்திரீகளுக்கு நல்லநாள் வெள்ளிக்கிழமைதானே. ஆகையால் நன்னாளால் என்பதற்கு வெள்ளிக்கிழமை என்று தெரியலாச்சுது. இதற்கனுகுணமாக பதின்மூன்றாவது பாசுரத்தில் "வெள்ளியெழுந்து வியாழன் உறங்கிற்று" என்பதைப் பார்க்கவும். இந்தவாக்கியத்துக்கு சிலர் சுக்கிரோதயம் குரு அஸ்தமனம் என்று அர்த்தம் சொல்லுவார். நேரான சப்தார்த்தத்தைவிட்டு அதியுக்தி பண்ணவேண்டுமோ? வெள்ளிக்கிழமை உஷக்காலம் என்று ஞாபகப் படுத்துகிறார்கள் மேலும் பதின்மூன்றாவது பாசுரத்தில் முதல்பாசுரத்தில் சொல்லியிருக்கும் "நன்நாளால்" என்னும் பதத்தையும் உபயோகப் படுத்தியிருக்கிறாள். ஆகையால் முதல்பாசுரத்தில் "நன்நாளால்" என்பதற்கு வெள்ளிக்கிழமை என்று குறிப்பிடலாம். இந்தமாதிரி மூன்றும் கூடுவது பல வருஷங்களுக்கொரு தடவை தான் நேரிடும். ஆதலால் முப்பது தினங்களாகவே அனுசரிக்கும் சம்பிரதாயம் ஏர்ப்பட்டிருக்கலாம்.

முதல் பாசுரத்தில் சம்பூர்ணமாக அர்த்தபஞ்சகமும் பிரபத்தி சாஸ்திரத்திற்கு அடியும் காணப்படுகிறது. ப்ராப்யஸ்ய ப்ரம்ஹணோரூபம் என்று கண்ணனுடைய ரூபலாவண்ய தேஜோ சக்தி விசேஷணங்களை சொல்வதும் நீராட்ட மென்கிற உபாயத்தையும் செல்வாதி விரோதிகளையும் "பறைதருவான்" என்று பலத்தையும் தானும் தோழிமாரும் ப்ரத்யகாத்மாக்களாக ஒரு பாசுரத்தில் சுருங்கச்சொல்லி "நாராயணனே!" என்று ஏகாரத்தால் மஹா விசுவாசத்தையும் "நமக்கே" என்று ஏகாரத்தால் பிரபன்னருக்கே என்றும் சொல்லி விட்டாள். இவ்விடத்தில் ஸம்ஸ்கிருத வாக்கியமான "நம" என்கிறதை சேர்த்ததும்கூட விசேஷமே. இரண்டாம் பாசுரத்தில் ஆநுகூல்ய சங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜனமும் சொல்லப்பட்டன. மூன்றுமுதல் ஐந்தாவது பாசுரம் வரையில் தம்முடைய நோன்பினால் உண்டாகும் பரோபகார எக்முத்தைப் பரக்கச்சொல்லி கோத்ப்ருத்வ வரணமும் ஆத்மநிக்ஷேபமும் பண்ணுகிறாள்.

மேலும் மூன்றாவது பாசுரத்தில்

எக்ஞார்த்தாத் கர்மணோன்யத்ரலோ கோயம்கர்மபந்தந:
ததர்தம் கர்மகௌந்தேய முக்தஸ்ஸங்கஸமாசர.

என்னுமாம்போலெ, நிஷ்காமமாக பகவதற்பிதமாக ஸாத்விகத் யாகத்துடன் செய்யும் கர்மங்களே லோகோபகாரியமாக இருக்குமென்று சூசிக்கப்பட்டது. 'மேலும் எக்ஞாத்பவதி பர்ஜன்ய:' என்று பகவான் அருளிச்செய்தார்.

நாலாவது பாசுரத்தில் இதுவிவரிக்கப்பட்டது. இந்த பாசுரத்தில் இன்னொருவிசேஷம் கண்டுக்கொள்ளுவது சாதாரண கவிசம்பரதாயம் பகவானை வர்ணிக்கும்போது, அவனுடைய திருமேனி முதலானவைகளை, நீலமேகம், மின்னல், கற்ஜனம், வர்ஷாதிகளைக்கொண்டு, சாம்யம் சொல்லுவதுண்டு. ஆண்டாளோ சமஸ்தத்தை ஈஸ்வரனாக பார்ப்பதால், பகவானுடைய திருமேனி சங்கசக்ராதிகளைக்கொண்டு, மேகாதிகளை வர்ணிக்கிறாள். இதில் மற்றொன்று வேதாந்தார்த்தமும் ஸ்பஷ்டம். மழைக்காக வருணனை பிரார்த்தித்தாலும் அது பகவானையே பிரார்த்திப்பதென்றும் வருணரூபத்தில் பகவானே பிரசாதிக்கிறானென்றும் ஸ்பஷ்டம்.

யோயோயாம் தனும் பக்த: ச்ரத்தயார்சிதுமிச்சதி
தஸ்யதஸ்யாசலாம் ச்ரத்தாம்தாமேவ விததாம்யஹம்
ஸதயாஸ்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதன மஹதே
லபதேசதத: காமான்மயைவ விஹிதான் ஹதான்.

இப்படிக்கு பகவான் அருளிச்செய்த வாக்கியங்களை பக்தர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு ஆண்டாள் லோகத்தாரைப் போலவே மழையைப் பிரசாதிக்க வருணனைப் பிரார்த்திக்கிறதாக நடனைசெய்து பகவானை பிரார்த்திக்கப் பட்டதாகவும், வருணதேவதையில் பகவத்ரூபமேகொண்டு பகவானே அநுக்கிரகம் பண்ணுவதை ஸ்பஷ்டமாக்கினாள்.

மேல்கொண்ட ஆறு முதல் பதினைந்தாவது பாசுரம் வரையில் ஒவ்வொரு பாசுரத்தால் ஒவ்வொரு தோழியை எழுப்புவதாக சிலரும் சிலர் மிகவும்யுக்தியால் ஒவ்வொரு பாசுரத்தால் ஒவ்வொரு ஆழ்வாரை எழுப்புவதாயும் வியாக்கியானங்கள்

பண்ணப்பார்த்திருக்கிறோம். சில ஆழ்வார்கள் ஆண்டாளுக்குப் பிறகு வெகுகாலம் கழித்து அவதரித்தாரே அவர்களை எழுப்புவது அஸம்பாவமல்லவோ வென்றால் பூர்வாவதாரங்களுண்டென்று சாதிக்கிறார்கள். என்புத்தியில் ஆறுமுதல் பதினான்கு வரையிலும் ஒரு தோழியையே பலவிதமாக எழுப்புகிறதாகவும் பதினைந்தாவது பாசுரத்தால் மற்றொரு தோழியை எழுப்புகிறதாகவும் தோன்றுகிறது. இந்தவகுப்பில் ப்ராப்தி விரோதியான செல்வம்கூடிய ஒருத்தியை உதாரணமாகவும் தத்விரோதமில்லாத பேதையை சுலபமாக பக்திமார்க்கத்தில் இழியப்பண்ணலாமென்று ஒற்றை பாசுரத்தால் ஒருவரையும் தெரிவித்தாரே.

ஆறுவது பாசுரத்தில் அதாவது முதல் முதலாக கோவிலில் ஊதப்பட்ட சங்கநாதத்தையும் முனிவர்களும் யோகிகளும் செய்யும் ஹரி ஹரி என்கிற ஸ்தோத்திரங்களையும் உஷக்காலத்துக்கு அடையாளமாகச் சொல்லி எழுப்புகிறாள். அதற்கு எழுந்திருக்கவில்லை. கோவிலில் சங்கு ஊதுவது அவனுடைய ஊழியம் அவன் செய்கிறான். முனிவர்களும் யோகிகளும் சுகமறியாத பைத்தியக்காரர்கள் அவரோடு எனக்கென்னவென்று படுக்கையை விடவில்லை. ஏழாவது பாசுரத்தால் கேவலப் பக்ஷிகள்கூட கூச்சலிடுவதையும் தயிர்கடையும் மத்துகளின் ஓசையையும் அடையாளமாய்ச் சொல்லுகிறாள். அதுவும் பயன்படவில்லை. பனியில் நனைந்து தூக்கமில்லாத பக்ஷிகள் கூச்சலிடுவதனால் எனக்கென்ன, பிழைப்புக்காகத் தயிர்கடையும் இடைச்சிகள் எழுந்ததினால் எனக்கென்னவென்று பள்ளியை நீங்கவில்லை. எட்டாவது பாசுரத்தில் எருமைகள்கூட மேயும் பொருட்டு வெளியில் போவதையும் மற்ற தோழிமார்கள் எல்லாம் நோன்புக்காக போகின்றவர்களை, போகாமல் காத்திருக்கச் சொன்னதையும் சொல்லி எழுப்புகிறாள். ஞானமில்லாத ஸ்தூல சரீரமுள்ள எருமைகள் செய்வதையும் சுகமறியாத பெண்பிள்ளைகள் எழுந்து பறக்கிறதையும் சொன்னால் எனக்கென்ன வென்று பள்ளியினின்று நீங்கவில்லை.

ஒன்பதாவது பாசுரத்தில் அவளுடைய செல்வத்தையெல்லாம் விவரித்துச்சொல்லி அவள் தாயாரையும் கூப்பிட்டு எழுப்

பச்சொல்லி பலநிஷ்டுரோத்திகளையும் சொல்லி எழுப்புகிருள். பிரயோசனமில்லை. பத்தாவது பாசுரத்தில் எழுந்திராமல் போனு லும் பதில்பேச்சாவது பேசக்கூடாதாவென்று சொல்லி கும்ப கர்ணன் ஸாம்யத்தையும் எடுத்து பரிகாஸம் பண்ணுகிருள். இதுவும் பிரயோஜனப் படவில்லை.

பதினோராவது பாசுரத்தால் எல்லாத் தோழிமார்களும் வந்து அவளுடைய முற்றம்புகுந்து, பகவானை ஸ்துதிசெய்வ தையும் சொல்லி பல உற்சாக வார்த்தையால் எழுப்புகிருள்.

பனிரண்டாவது பாசுரத்தால் தோழிமார்களெல்லாம் பனி தலையில்விழ வாசலில் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைச் சொல்லிக்காட்டி எழுப்புகிருள். அதற்கும் எழுந்திருக்கவில்லை.

பதின்மூன்ருவது பாசுரத்தால் வெள்ளிக்கிழமை வந்து விட்டதாகவும் நோன்பிற்கு சரியானகாலம் வந்துவிட்டதாகவும் ஞாபகப்படுத்தி எழுப்புகிருள்.

பதிநான்காவது பாசுரத்தால் என்னசொன்னுலும் பள் ளியைவிட்டு விலகாத தோழியை பள்ளியைவிட்டு நீங்காவிட் டாலும் பள்ளியிலிருந்தே புழக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்ததையும் ஆம்பல்வாய் கூம்பினதையும் பார்த்தாவது உதயகாலத்தை யறிந்து எழுந்திருக்கச் சொல்லு கிருள். இவ்வளவுவிதமாய் எழுப்பினபின் இந்தச்செல்வப்பெண் எழுந்தாள்.

பதினைந்தாவது பாசுரத்தில் ஒருபேதையைக் கூப்பிட அவள் கூப்பிடுவதன் முன்பே ஸித்தமாயிருப்பதைத் தெரிவிக் கிருள் ஆகையால் முதல் பாசுரத்தில் முமுக்ஷு விரோதியான செல்வங்களை ஸாதனையாக சொன்னதை ஒன்பது பாசுரங்க ளால் விவரித்தாள். ஒவ்வொரு பாசுரத்திலும் பக்திவிரோதி யான செல்வத்தை ஒவ்வொருவிதமாய் விவரித்தாள்.

பதினேராவது பாசுரத்தால் சண்டாதி துவாரபாலகரை முதலில் ஸ்துதிசெய்து தம்முடைய நிஷ்காமபக்தியைத் தெரிவிக்கிருள்.

பதினேழாவது பாசுரத்தில் நேராக பகவானைப் பிரார்த்திக்கிருள். பதினெட்டு பத்தொன்பது இருபதாவது பாசுரங்களில் புருஷகார மில்லாமல் பகவானையடைய முடியாதென்றறிந்து ஸ்ரீ மஹா லக்ஷ்மியை புருஷகாரம் செய்துகொண்டு ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் கிருபைக்கு கொஞ்ச மேனும் தாமஸமாவது பொருக்காமல் "எத்தனையேலும் பிரிவாற்றகில் லாயால் தத்துவமன்று" என்று பக்தியினுடைய ஆதுரத்தால் நிஷ்டூரப் படுத்துகிருள்.

இருபத்தொன்றுமுதல் இருபத்தெட்டாவது பாசுரம் வரையில் பகவானுடைய வாத்ஸல்ய ஸௌலப்பியாதி குணங்களைப் பலவிதமாய்த் துதிசெய்து இருபத்தொன்பதாவது பாசுரத்தால் ஸம்பூர்ணமான பார ஸமர்ப்பணம் செய்கிருள்.

இப்படி பரசமர்ப்பணம் பண்ணுவதில் "ஏதத்தேஹாவஸானே மாம் த்வத்பாதம் ப்ராப்யஸ்வயம்" என்று கோராமல் எற்றைக்குமே ழேழு பிறவிக்கு முன்றன்னே துற்றேமே யாவோமுனக்கே நாமாட் செய்வோம்" என்று என் பிரார்த்தித்தாள். இதுதான் தீவ்ர பிரபன்ன ருக்கும், விளம்பத்தை சஹித்து அநுபவிக்கும் பக்தர்களுக்குமுள்ளபேதம். திருமங்கமன்னன் "நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆளென்னைக் கொண்டருளே" என்கிருர். குலசேகர ஆழ்வாரே "ஏதத்ப்ராத்யம் மம பஹுமதம் ஜன்மஜன்மாந்தரேபி த்வத்பாதாம்போருஹ யுககதா நிச்சலாபக்திரஸ்து" 'திவிவா புவிவாம மாஸ்துவாஸோ நரகேவாநரகாந்தக ப்ரகாமம் அவதீரித ஸாரதாரவிந்தௌ சரணௌதே மரணேபிசிந்தயாமி'. ஊனேரு முதலான பாசுரங்களால் நாணுவித ரூபங்களால் அர்ச்சா கைங் கரியத்தையே கோரினுரல்லவோ. த்ரிவிதத்தியாகங்களையும் ஆநுஷ்டித்து பக்தியோகத்திலழுந்த ஜீவனுக்கு லீலாவிபூதியில் குறைவில்லை. நித்தியவி பூதி லோகத்தில் அதிக்யமுமில்லையென்பது ஆண்டாளுடைய சித்தாந்தம்

முப்பதாவது பாசுரத்தில் ஆசார்ய நிஷ்டையையும் நாமறிந்து கொள்ளலாம். இந்தப்படி பகவத்விஷயமும் உபநிஷத்சாரமும் சரணு கதி சாஸ்திரமும் கேவலம் பாமரர்களுக்குக்கூட மனதிற்கினிமையாக சொல்லப்பட்ட திருப்பாவையை அரியாதவர்களுக்கு "கோதைத்தமி ழையைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பது வம்பு" என்பது வீணுகாது.

சித்தூர்,
7—4—1933.

சேட்ளூர் துரைசாமி அய்யங்கார்.

தி டிஸ்டிரிக்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ், சித்தூர்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

சரத் ருது வ்ருச்சிகமீ] ஸ்ரீமுகவஷ கார்த்திகைமீ [தக்ஷிணாயநம்

(1933 நவம்பர்-டிஸம்பர்)

இ	த	கி.	திதி.	நக்ஷ.	ச்ரா. தி.	
16	1	வி	ச. 45-47	ஸ்வா. 50	சதுர்தசீ	விஷ்ணுபதி, கரிநாள், ஸங்க்ரமண தர்ப்பணம்
17	2	வெ	அ. 41-48	வி. 47-45	அமா	
18	3	ச	ப். 36-12	அ. 44-11	ப்ரக	சஷ்டி
19	4	ஞா	த். 30-38	கே. 40-18	த்வி	
20	5	தி	த்ரு 24 50	மூ. 36-13	த்ருதீ	
21	6	செ	ச. 18-59	பூ. 32-8	சது.பஞ்.	
22	7	பு	ப. 13-12	உத். 28-13	ஷஷ்ம	
23	8	வி	ஷ. 7-52	தி. 24-47	ஸப்தமி	
24	9	வெ	ஸ 3-4	அ. 21-55	அஷ்ட	
			அ. 55-52			
25	10	ச	ந. 55-49	ச. 19-48	நவமி	கரிநாள்
26	11	ஞா	த. 53-42	பூ. 18-36	தசமி	
27	12	தி	ஏ 52-49	உத். 18-35	ஏகா	கைசிக ஏகாதசி
28	13	செ	த். 53-14	ரே. 19-44	த்வா	
29	14	பு	த்ர. 54 59	அ. 22-26	த்ரயோ	
30	15	வி	ச. 57-54	ப 25-54	சதுர்	
1	16	வெ	பௌ. 60	கா. 30-27	பூர்ணி	பாஞ்சராத்ர தீபம், திருமங்கை திரு. நக்ஷ.
2	17	ச	பௌ. 1-49	ரோ. 36	ப்ரத	திருப்பாண. திரு ந. கரிநாள். இஷ்டி.
3	18	ஞா	ப்ர. 6-38	ம்ரு. 42-14	த்வி	
4	19	தி	த். 11-52	திரு. 48-4	த்ருதீ	
5	20	செ	த்ரு. 17-39	பு. 54-51	அதிதி	
6	21	பு	ச. 22-30	பூ. 60	சதுர்த்	அஹஸ் 28-27
7	22	வி	ப. 26-13	பூ. 0-37	பஞ்ச	
8	23	வெ	ஷ. 29-26	ஆ. 5-29	ஷஷ்ட	
9	24	ச	ஸ. 31-23	மக. 9-10	ஸப்த	
10	25	ஞா	அ. 32-10	பூ. 11-4	அஷ்ட	
11	26	தி	ந. 31-37	உத். 13-6	நவமி	
12	27	செ	த. 29-54	ஹ. 13-14	தசமி	
13	28	பு	ஏ. 26-58	சி. 12-11	ஏகா	
14	29	வி	த். 23-10	ஸ். 10-13	த்வா	

[இந்த மாஸத்தில் க்ருஷ்ண த்ரயோதசியில் செய்யவேண்டிய சிராத்தத்தை மார்கழி மீ 1௳ வெள்ளிக்கிழமை திநம் செய்தல் வேண்டும்]

ஸ்ரீ:

சந்தா வரவு

(23-9-33 முதல் 22-10-33 வரையில்)

		ரூ.	அ.
ராவ்பஹதூர். R. நரஸிம்மாசாரியர் மல்லேசுவரம், பெங்களூர்	...	3	0
K. தேவநாதாசாரியர், சாமராஜ்பேட்டை, பெங்களூர்	...	3	0
T. S. ராமண்ணு ஐயங்கார், பஸவங்குடி, பெங்களூர்	...	3	0
S. கிருஷ்ணமாசாரியர், கோபிசெட்டிப்பாளையம்	...	3	0
N. கோவிந்தாசாரியர், பொன்னேரி	..	3	0
K. S. தாதாசாரியர், வந்தவாசி	...	3	0
R. கிருஷ்ணையங்கார், சைதாபேட்டை.	...	3	0
P. K. பார்த்தஸாரதி ஐயங்கார், சைதாபேட்டை	...	3	0
T. மாணிக்க நாயகர், சேலம்	...	3	0
P. கிருஷ்ணய்யங்கார், ராசிபுரம், சேலம்	...	3	0
T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சேலம்	...	3	0
K. R. நரஸிம்மராகவாசாரியர், சேலம்	...	3	0
T. S. தாதாசாரியர், சேலம்	...	3	0
S. ஸௌந்தரராஜ ஐயங்கார், மதுரை	...	3	0
K. N. ராமஸ்வாமி ஐயங்கார், மதுரை	...	3	0
S. சக்கரபாணி ஐயங்கார். நந்தம். மதுரை	...	3	0
பிரின்ஸ்பல், ராமேசுவரம் தேவஸ்தானம் பாடசாலை. மதுரை	...	3	0
K. R. கோபாலையங்கார், நாராயணகூடா. ஐதராபாக்கம்	...	3	0
C. S. பார்த்தஸாரதி ஐயங்கார், லாஹூர்	...	3	0
P. D. திருவேங்கடாசாரியர், தேப்பெருமாள் நல்லூர்	...	3	0
V. K. நரஸிம்மாசாரியர், குண்டக்கல்	...	3	0
S. V. ரங்காசாரியர், ராமநாதபுரம்	...	3	0
C. துரைஸாமி ஐயங்கார், சித்தூர்	...	3	0
ஐயன். ஸ்ரீநிவாஸாசாரியர், சித்தூர்	...	3	0
R. கோபாலஸாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
V. சக்ரவர்த்தியாசாரியர், ஸ்ரீரங்கம்	...	3	0
D. ரகுநாதஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
T. ராஜகோபாலாசாரியர், திண்டிவனம்	...	3	0
S. கோபாலையங்கார், திண்டிவனம்	...	3	0
V. ரங்கஸாமி ஐயங்கார், திண்டிவனம்	...	3	0
C. ரங்கராமாநுஜாசாரியர். ஹிந்துபூர்	..	3	0
K. வீரராகவ ஐயங்கார், நாமக்கல்	...	3	0
M. S. ரங்கஸாமி ஐயங்கார், அவினாசி	...	3	0
V. வரதாசாரியர், திருவத்திபுரம்	...	3	0
M. பாஷ்யமையங்கார், பூனா	...	3	0
A. S. சக்ரவர்த்தி ஐயங்கார், ஷில்லாங்	..	3	0
T. V. சங்கரராவ், சைதாப்பேட்டை	:	3	0
T. R. ரங்கஸாமி ஐயங்கார், அமீல்தார், காங்கன்ஹல்லி, பெங்களூர்		3	0
M. R. சாரங்கபாணி ஐயங்கார், மதுரை	..	3	0
C. R. கிருஷ்ணமாசாரியர், கூடலூர்	...	3	0

நிராகரோதி | அத ஏவ ச மநௌ "ப்ராதுராஸீத் தமோநுத:" "ஸிஸ்ருக்ஷுர்விவிதா: ப்ரஜா:" "அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத்" "தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா" இதி ப்ரஹ்மணோ ஜந்மச்ரவணாத் தஸ்ய க்ஷேத்ரஜ்ஞத்வமவகம்யதே; ததா ச ஸ்ரஷ்டு: பரஸ்ய ஸ்ரஷ்டவ்யஸ்ய தத்விஸ்ருஷ்டஸ்ய ச ப்ரஹ்மண:

குப் பிறப்பு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அந்த ப்ரஹ்மா ஜீவ னென்றே ஏற்படுகின்றது. இது மாத்ரமன்று: "அயநம் தஸ்ய" இத்யாதியான

அத ஏவ ச மநௌ—இது வரையில் சதுர்முக ப்ரஹ்மா ஜகத்காரண வஸ்துவாக மாட்டார் என்பது, வேத வாக்யங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டது. இனி: அதுவே மநு ஸம்ருதியைக் கொண்டு நிரூபிக்கப்படுகின்றது.

ப்ராதுராஸீத் தமோநுத:—ஸத்வம் ரஜஸ் தமஸ் இவை மூன்றும் ஸமமாக இருக்கும் காலத்தில் ப்ரதாநம் என்னும் தத்வம் 'தமஸ்' என்று சொல்லப் படும். அப்பொழுது அதை, அநிருத்தனுல் அதிஷ்டிதமென்று சொல்வார்கள். அப் படி அநிருத்தனென்று சொல்லப்படும் அதிஷ்டாதா அப்பொழுது ஆவிர்ப்பவித்தான் என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். அப்பொழுது சதுர்முக ப்ரஹ்மா இல்லையான தால் அந்த ப்ரஹ்மாவை ஜகத்காரண வஸ்து வென்று சொல்வது சரியன்று என்ப தைக் காண்பிக்கும் பொருட்டு இந்த வாக்யம் கூறப்பட்டிருக்கின்றது. **தமோநுத:**- தமஸ்ஸென்று சொல்லப்படும் 'ப்ரதாநம்' என்னும் தத்வத்தை நியமிக்கிறவன்.

ஸிஸ்ருக்ஷுர்விவிதா: ப்ரஜா:— 'பல வகைப்பட்ட ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க விருப்பமுள்ளவனுய். ப்ரஹ்மா இனி ஸ்ருஷ்டிக்கப்படும் ப்ரஜைக ளுடன் ஒருவராகையால், அவருக்கு இந்த ஸ்ருஷ்டியின் இச்சை சொல்வது உபபந்ந மாக மாட்டாது.

அப ஏவ—இந்த வாக்யமும் இதற்குப் பிறகு கூறப்படும் '**தஸ்மிந் ஜஜ்ஞே**' இத்யாதி வாக்யமும், அண்டத்திலிருந்து ஜநிக்கப் போகும் ப்ரஹ்மா, அண்ட ஸ்ருஷ்டிக்குக் காரணமாக மாகமாட்டார் என்பதைக் குறிக்கின்றன.

அயநம் தஸ்ய—இதன் பொருள்:—' அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட அப் (ஜலம்), அந்த ஸ்ருஷ்டி கர்த்தாவுக்கு ஸ்தாநமாக இருந்தது; ஆகையால் அவனுக்கு 'நாராயணன்' என்று பெயர். அந்த நாராயணனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட புருஷனுக்கு ப்ரஹ்மா வென்று பெயர்' என்பது தான். இந்த ச்லோகமும் அந்த ப்ரகரணத்தி

“அயநம் தஸ்ய தா: பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:।
தத்விஸ்ருஷ்ட: ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே॥’
இதி மாநவநிர்தேசாச்ச। வைஷ்ணவே ச புராணே ஹிரண்ய

ச்லோகத்தில், நாராயணனே ஜகத்தின் ஸ்ருஷ்டி கர்த்தாவாகிற பரம புருஷனென்றும், ப்ரஹ்மா வென்பவர் அந்த நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவரென்றும் பெயரைக் குறித்து வ்யக்தமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும்,

---

லேயே காணப்படுகின்றது என்பதைக் கவனிக்க வேண்டும். ‘நாராயணன்’ என்னும் சப்தத்திற்கு நிர்வசநம்:—நாரா: அயநம் யஸ்ய ஸ: [எவனுக்கு ஜலம் ஸ்தாநமோ]

ததா ச வைஷ்ணவே புராணே—கீழ்க் கூறப்பட்டுள்ள மநு ஸ்ம்ருதி ச்லோகங்களுக்குக் கீழ்க்கூறியபடி அர்த்தம் சொல்வதே சரி என்பதைக் காண்பிக்கின்றது இந்த விஷ்ணு புராண கட்டம்.

பாவநாத்ரயாந்வயாச்ச-‘மூன்று பாவனைகளுள் ஏதாவதொன்றில் அந்வயித்திருப்பதானது ஜகத்தின் பரம காரணமாக இருப்பதற்கு விருத்தம்’ என்பது ஸ்ரீ விஷ்ணு புராணத்திலிருந்து ஏற்படுகின்றது. ‘பாவனை’ என்னும் பதத்திற்கு ‘அநுஷ்டிக்கப்படவேண்டிய விஷயத்திற்கு வேண்டுவதும், மநஸ்ஸால் செய்யப்படுவதுமான ப்ரயத்நம்’ என்பது பொருள். இது மூன்று வகைப்படும். அவைபாவன:—(1) அநுஷ்டிக்கப்படவேண்டியது காம்ய கர்ம ரூபமாயிருக்கும்பொழுது அதை, விஷயமாக உடைய ப்ரயத்நம் ஒன்று; இதற்குக் ‘கர்ம பாவனை’ என்று பெயர்; (2) அநுஷ்டிக்கப்படவேண்டியது உபாஸ்திரூபமாக இருக்கும்பொழுது, அதை விஷயமாக உடைய ப்ரயத்நம் இரண்டாவது; இதற்கு ‘ப்ரஹ்ம பாவனை’ என்று பெயர்; (3) அநுஷ்டேயம் காம்ய கர்ம ரூபமாகவும் உபாஸ்தி ரூபமாகவும் இருக்கும்பொழுது, அவைகளை விஷயமாக உடைய ப்ரயத்நம் மூன்றாவது; இதற்கு ‘உபய பாவனை’ என்று பெயர். தேவர்கள் மநுஷ்யர்கள் இவர்கள் கர்ம பாவனை உடையவர்கள்; இவர்களுக்குக் கர்மாநுஷ்டாநம் ப்ரதாநம், உபாஸ்தி அப்ரதாநம். ஸநக ஸநந்தநாதிகள் ப்ரஹ்ம பாவனை உடையவர்கள்; இவர்களுக்கு உபாஸநம் ப்ரதாநம், கர்மாநுஷ்டாநம் அங்கமாய் அப்ரதாநம். சதுர்முக ப்ரஹ்மா முதலான ஜகந்நிர்வாஹகர்கள் உபய பாவனை உடையவர்கள்; இவர்களுக்கு ஜகந்நிர்வாஹ காலத்தில் கர்மம் ப்ரதாநம், மற்றைக் காலங்களில் உபாஸநம் ப்ரதாநம். ‘நான் மநுஷ்யன், நான் தேவன்’ என்னும் விசேஷ ஜ்ஞாநம் எவர்களிடம் இருக்கின்றதோ அவர்களெல்லாரும் இம்மூன்று பாவனைகளுள் ஒன்றை ஆதரிக்க வேண்டியவர்கள். அதாவது: ஸம்ஸார பந்தத்தினுள் அகப்பட்டுள்ள ஜீவன்களுக்கே இந்த பாவனைகளில் அந்வயம் உண்டு என்று சொன்னதாயிற்று. முக்தர்களுக்கு

ப்ரஹ்மாதீநாம் பாவநாத்ரயாந்வயாதஶுத்த்யுக்த்வேந ஶுபாஶ்ரயத்வாந ர்ஹத்வாவதாரணாச்ச க்ஷேத்ரஜ்ஞத்வம் நிஶ்சீயதே ।

இதி நிமித்தோபாதாநைக்யஸமர்த்தநம்

'ப்ரஹ்மா முதலானவர்களுக்கு மூன்றுவித பாவனைகளின் அந்வய முண்டாகையால், அவர்கள் அசுத்தர்கள்; அந்தக் காரணத்தாலேயே அவர்கள் சுபாச்ரயமாக மாட்டார்கள் என்பது வ்யக்தமாகத் தெரிகின்றது' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ப்ரஹ்மா முதலானவர்கள் கர்ம பந்தத்திற்கு உட்பட்ட ஜீவர்களே என்பது நிச்சயம்.

நிமித்த காரணம் உபாதான காரணம் இரண்டும் ஒன்றே என்னும் ப்ரகரணம் முற்றுப் பெற்றது.

அநுஷ்டேய விஷயமே இல்லையாதலால், அவர்களுக்கு இந்தப் பாவனைகளில் அந்வயம் இல்லை இப்படி, சதுர்முக ப்ரஹ்மாவுக்குப் பாவனைகளில் அந்வயம் உண்டு என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அவரும் ஸம்ஸாரிகளுள் ஒருவர் என்று ஏற்படுகிறது. ஆகையால் அவரை ஜகத்திற்குப் பரம காரணமாகச் சொல்வது அநுபபந்நமே ஆகும். இதுதான் இவ்விடத்திற் சொல்லப்படும் விஷயம். அஶுத்த்யுக்த்வேந — ஸம்ஸார ஸம்பந்தமே இவ்விடத்தில் அசுத்தி என்று சொல்லப்படுகின்றது. ஶுபாஶ்ரயத்வாநர்ஹத்வாவதாரணாச்ச — கீழ்ச் சொல்லியபடி ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் சதுர்முக ப்ரஹ்மா முதலியவர்களுக்குப் பாவநா த்ரயாந்வயம் உபபாதிக்கப்பட்டு, அது காரணமாக அவர்கள் முமுக்ஷுக்களால் உபாஸிக்கத் தகாதவர்கள் என்பது விவரிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி முமுக்ஷுக்களுடைய த்யாநத்திற்கு அவர்கள் அநர்ஹர்கள் என்பதே அவர்கள் சுபாச்ரயமாகமாட்டார்கள் என்பதன் பொருள்.

ஸ்ரீ:

𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌵𑌾𑌦𑌨𑌿𑌰𑌸𑌨𑌮𑍍 ।

𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌹𑍁𑌃—'𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑌬𑍍𑌦𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌵𑌾𑌦𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌧𑌾𑌯𑌿𑌤𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌣𑌨𑍀𑌯𑌮𑍍, 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌬𑍋𑌧𑌕𑌤𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌵𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍; 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌰𑍂𑌪

ஸ்ரீ:

வ்யுத்பத்யபாவ வாதத்தின் கண்டநம்.

"𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍"... சிலர், 'சப்தங்க ளெல்லாம் ஒரு கார்யத்தை முன்னிட்டுக்கொண்டே தம்தம் பொருளைப் போதிப்பிக்கின்றன; ஏனென்றால், ஒரு வ்யவஹாரத்தாலல்லாமல் ஒரு சப்தத்திற்கும் தனது பொருளைப் போதிப்பிக்கக்கூடிய சக்தி நேரமாட்டாதன்றோ? வ்யவஹாரங்களெல்லாம் ஏதாவதொரு கார்யத்தின் ஜ்ஞாநத்தையே ஆதாரமாக உடையன் அல்லவா? ஆகையால், சப்தங்கள் விதி வாக்யங்களையோ அர்த்தவாத வாக்யங்களையோ மந்த்ர வாக்யங்களையோ எந்த வாக்யங்களை ஆச்ரயித்திருந்தபோதிலும், அவை யெல்லாவற்றுக்கும் ஒரு கார்யத்தின் வழியாகவே ப்ரமாணத் தன்மை சொல்லவேண்டும். ஆகையால், எவ்வித கார்யத்தின் வழியுமின்றிக்கே ஸ்வத:

ஸ்ரீ:

வ்யுத்பத்யபாவ வாத நிரஸநம்.

இந்த க்ரந்தத்தில், ஸ்ரீபாஷ்யகாரர், இதுவரையில் ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களாகிற உபப்ருஹ்மணங்கள் இவை யெல்லாவற்றிலும், தமது ஸித்தாந்தத்திற்கு ஸாதகங்களான ப்ரமாணங்களே காணப்படுகின்றன வென்பதையும், பர மதத்தின் சங்கைக்கு அவை இடம் கொடுக்கவில்லை யென்பதையும் உபந்யஸித்து, முதல் ச்லோகத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'விஷணெ' என்னும் பதத்தின் பொருளை விவரித்தார். இனி அப்படி உபந்யஸிக்கப்பட்ட அர்த்தத்தை ஸ்திரீகரணம் செய்வதற்காக, 'ஸித்தமான பொருளுக்கு வ்யுத்பத்தி ஏற்படமாட்டாது' என்னும் வாதத்தை நிரஸநம் செய்கிறார்.

இது, மீமாம்ஸகர்களுள் ப்ராபாகரர்க ளென்பவரால் செய்யப்படும் வாதம். இதைச் சற்று விவரிப்போம். சப்தம் என்பது ஒரு அர்த்தத்தைக் குறிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஸம்ஜ்ஞை. 'இந்தச் சப்தத்திற்கு இது அர்த்தம்' என்று அறிந்தவனை, 'வ்யுத்பந்நன்' என்று நாம் வ்யவஹரிக்கின்றோம்; அந்த அர்த்தத்தின் ப்ரதிபத்தி, 'வ்யுதபத்தி' என்று சொல்லப்படும். இந்த அர்த்த ஜ்ஞாநம், முதல் முதலில் ஒரு மனிதனுக்கு எவ்விதம் ஏற்படுகின்றது என்னும் விஷயத்தில் பிந்ந பிந்நங்களான அபிப்ராயங்க ளுண்டு. சிலர், எல்லாச் சப்தங்களும் ஒரு கார்யத்தின் வழியாகவே தமது அர்த்தங்களை உணர்த்துகின்றன வென்றும், அப்படி கார்யத்திற்கு எட்டாமல் ஒரு வஸ்து உண்டானால், அது ஒரு சப்தத்தாலும் போதிக்கப்படமாட்டாதென்றும் வாதிக்

𑌣𑌵 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌿; 𑌅𑌤𑍋 𑌨 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌶𑌬𑍍𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍' 𑌇𑌤𑌿, 𑌅𑌤𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌦𑍇𑌵 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌥𑌬𑍋𑌧𑌕𑌤𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌵𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑌿𑌮𑌿𑌯𑌂 𑌰𑌾𑌜𑌾𑌜𑍍𑌞𑌾? 𑌸𑌿𑌦𑍍𑌧𑌵𑌸𑍍𑌤𑍁𑌷𑍁 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌬𑍋𑌧𑌕𑌤𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌸𑍁𑌕𑌰𑌮𑍍। 𑌤𑌥𑌾 𑌹𑌿, 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌦𑌿𑌨𑌾 '𑌅𑌪𑌵𑌰𑌕𑍇 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑌿 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌯 𑌜𑍍𑌞𑌾𑌪𑌯' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 '𑌅𑌪𑌵𑌰𑌕𑍇 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇; 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥

ஸித்தமாய் நிஷ்பந்நமாக இருப்பதான ஒரு பொருளை வேத சப்தங்கள் போதிக்கின்றனவென்று சொல்வது ஸாத்யமில்லை. அவை அம்மாதிரியான வஸ்துவில் ப்ரமாணமாகமாட்டா' என்று ஒரு வாதத்தைச் செய்கிறார்கள். அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகின்றது. இவ்விதம் வ்யவஹாரத்தின் வழியாகவே சப்தங்களெல்லாவற்றுக்கும் தம் தம் பொருளைப் போதிப்பிக்கக்கூடிய சக்தி அறியப்படவேண்டும் என்று சொல்வது ராஜாவின் கட்டளையோ? ஒரு வ்யவஹாரத்தாலும் ஏற்படாமல் ஸ்வத: ஸித்தமாயுள்ள வஸ்து விஷயத்திலும், சப்தங்களுக்குப் போதிப்பிக்கும் சக்தி உண்டு என்பதை நிரூபிப்பது ஸுலபமே. ஒருவன் 'தண்டம் வீட்டின் உள்ளே இருக்கின்றது என்பதைத் தேவதத்தன் என்னும் ஒருவனுக்குத் தெரிவி' என்று மற்றொருவனைப் பார்த்து சில கை ஜாடைகளால் போதிப்பித்து அனுப்புகிறான். அவன் அந்த ஸமாசாரத்தை

கிறார்கள். அவர்களின் மதப்படி, 'பசு' என்னும் சப்தம் எதைக் குறிக்கின்றது என்பதை அறியாத ஒரு அவ்யுத்பந்நனுக்கு, அந்தப் பதத்தின் அர்த்த ஜ்ஞாநம் பின்வருமாறு ஏற்படுகின்றதாம். 'பசுவைக் கொண்டுவா' என்று ஒரு வ்யுத்பந்நன் மற்றொரு வ்யுத்பந்நனைப் பார்த்துச் சொல்வதையும், அதற்கு இணங்கி அந்த மற்றொருவன் பசுவை ஓட்டி வருவதையும் ஸமீபத்தில் இருந்து பார்த்துவரும் ஒரு அவ்யுத்பந்நன் முதல் மனிதனால் உச்சரிக்கப்பட்ட 'பசுவைக் கொண்டுவா' என்னும் சப்தங்களைக் கேட்டு, பிறகு இரண்டாவது மனிதன் பசுவை ஓட்டி வந்ததையும், முதல் மனிதன் அதைச் சரி என்று ஒத்துக்கொண்டதையும் பார்த்து, 'பசு என்னும் சப்தத்திற்கு அந்த ம்ருகம் பொருள்' என்னும் ஜ்ஞாநத்தை அடைகின்றான். இதுதான் வ்யுத்பத்திக்கு மார்க்கம் என்பது அவர்களின் வாதம். வேறு வழியாகவும் இந்த வ்யுத்பத்தி ஸம்பவிக்கக்கூடும் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையாதலால், இம்மாதிரியாக ஒருவித கார்யத்திற்கும் எட்டாமல் இருக்கும் பர ப்ரஹ்மத்தின் விஷயத்தில் ஒரு சப்தமும் ப்ரமாணமாகமாட்டாது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். வேத வாக்யங்களுள் '𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌕𑌾𑌮𑍋 𑌯𑌜𑍇𑌤' [ஸ்வர்க்கம் விரும்புவோன் யாகத்தைச் செய்யவேண்டும்] என்பது முதலான கார்யபரங்களான வாக்யங்களே அர்த்த ஜ்ஞாநத்தை உண்டுபண்ணக்கூடியவை. '𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' [ப்ரஹ்மமென்பது ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயுமுள்ள ஒரு வஸ்து] என்பது முதலான கார்யங்களின்றிக்கே கேவலம் ஸித்த வஸ்து பரங்களாக இருக்கும் வாக்யங்கள் அர்த்த ஜ்ஞாநத்தை உண்டுபண்ணக் கூடியவை அல்ல. ஆகையால், யாகம் முதலான கர்மங்களைப்பற்றிப் பேசும் கர்ம காண்டமே ப்ரமாணமாகக்கூடியது; ஆத்ம வஸ்து

हस्तचेष्टादिभिः जानाति पार्श्वस्थोऽन्यः स्वयमव्युत्पन्नोऽ
व्युत्पन्नस्य बोधनाय 'अपवरके दण्डः स्थितः'
इति शब्दस्य प्रयोगमनुसन्धाय अस्यार्थस्यायं शब्दो
बोधक इति जानातीति किमत्र दुष्करम्? तथा बालाः, 'ता
तोऽयम्' 'इयं माता' 'अयं मातुलः' 'अयं मनुष्यः' 'अयं
मृगः' 'चन्द्रोऽयम्' 'अयं च शशः' इति मातापितृप्रभृ
तिभिः शब्दैः शनैः शनैरङ्गुल्या निर्देशेन तत्र

'அபவரகே தண்ட: ஸ்தித:', ['தண்டம் உள்ளே இருக்கின்றது'] என்னும் வார்த்தைகளைச் சொல்லி தேவதத்தனுக்குத் தெரிவிக்கிறான். பக்கத்தில் இருக்கும் மற்றொருவன், முதல் மநுஷ்யனால் செய்யப்பட்ட கை ஜாடைகளின் அர்த்தத்தை ஊமையன்போல அறிந்துகொண்டு, தான் ஏற்கனவே சப்தங்களின் அர்த்தத்தை அறியாதவனாக இருந்தபோதிலும், தன்னால் கை ஜாடைகளைக்கொண்டு அறியப்பட்டுள்ள அர்த்தத்தைத் தெரிவிக்க 'அபவரகே தண்ட: ஸ்தித:' [உள்ளே தண்டம் இருக்கின்றது] என்னும் சப்தங்கள் ப்ரயோகம் செய்யப்படுகின்றன என்பதை உணர்கின்றான். இந்தச் சப்தங்களுக்கு இது அர்த்தம் என்பதை அவன் தெரிந்துகொள்வதில் என்ன கஷ்டம் ஏற்படக்கூடும்? இவ்விதமே பாலர்கள் எல்லாரும், 'இவர் தகப்பனார், இவர் தாயார், இவர் அம்மான், இவன் மநுஷ்யன், இது ம்ருகம், இது சந்த்ரன்,

---

வைப்பற்றிப் பேசும் உபநிஷத் பாகம் ப்ரமாணமாகமாட்டாது. ஆகையால் வேதாந்த விசாரம் செய்வதே வீண். இதுதான் இம்மாதிரி வாதிப்பவர்களின் கொள்கை. இந்த வாதத்தைத்தான் வ்யுத்பத் யபாவவாத மென்று வேதாந்திகள் சொல்வார்கள். இதைக் கண்டிப்பது ஸகல வேதாந்திகளுக்கும் அபிமதமே.

சப்தங்களுக்கு ஒரு கார்யத்தின் வழியாக ப்ராமாண்யம் ஸம்பவிக்கக்கூடும் என்பதை வேதாந்திகள் நிரஸநம் செய்ய வில்லை; 'கார்ய பரமாகவே ப்ராமாண்யம் ஸம்பவித்தல் வேண்டும்; வேறு விதமாக ஸம்பவிக்கமாட்டாது' என்னும் நிர்ப்பந்தம் மாத்ரம் நிரஸிக்கப்படுகின்றது: இந்த நிரஸநத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் போகும் வழி பின் வருமாறு: சப்தத்தின் அர்த்த ஜ்ஞாநம் ஜநிப்பது இரு வகைப்படும். யத்ருச்சை யாகவும் ஜநிக்கக்கூடும்; புத்தி பூர்வகமாகவும் ஜநிக்கக்கூடும். இரண்டு விதங்களிலும் கார்யத்தின் வழியின்றிக்கும் வ்யுத்பத்தி ஏற்படுகின்றது என்பதை முதலில் நிரூபணம் செய்துவிட்டு, பிறகு, கார்யத்தின் வழியாகவே வ்யுத்பத்தி ஏற்படவேண்டும் என்னும் நிர்ப்பந்தத்தை ஒத்துக் கொண்டாலும், வேதாந்த வாக்யங்களும் கார்ய பரங்களாக எடுத்துக் கொள்ளப்படக் கூடுமாதலால், வேதாந்தங்களிற் சொல்லப்படும் ப்ரஹ்மத்தின் ஸித்தி நிச்சயம் உண்டு என்று உபபாதிக்கிறார். கடைசியாக, 'இந்தக் கார்ய வாக்யார்த்த வாதிகள் கார்யம் என்று ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறார்களே! அந்தக் கார்யத்தின் லக்ஷண மென்ன?' என்பதை விசாரித்து, அதற்கு ஒரு லக்ஷணமும் சொல்லக்கூடாதாதலால், அவர்களுடைய வாதம் நிலை பெறத்தக்கதன்று என்று நிரூபித்து அந்த வாதத்தைக் கண்டிக்கிறார். இது தான் இந்த நிரஸநத்தின் ரீதி.

विध्यर्थवादमन्त्रस्य — விதி அர்த்தவாதம் மந்த்ரம் இம்மூன்

தத்ர ப³ஹுஶ: ஶிக்ஷித:, தைரேவ ஶப்³தை³ஸ்தேஷ்வர்தே²ஷு ஸ்வாத்மநஶ்ச பு³த்³த்⁴யுத்பத்திம் த்³ருஷ்ட்வா, தேஷ்வர்தே²ஷு தேஷாம் ஶப்³தா³நாமங்கு³லிநிர்தே³ஶபூர்வக: ப்ரயோக³: ஸம்ப³ந்த⁴ஜ்ஞாநாஹா வாந் ஸாங்கேதயித்ருபுருஷஜ்ஞாநாத்³வா போ³த⁴கத்வநிப³ந்த⁴ந இதி க்ரமேண நிஶ்சித்ய, புநஶ்சாஸ்ய ஶப்³த³ஸ்யாயமர்த² இதி வ்ருத்³தை⁴ர்வ்யுத்பந்நை: ஶிக்ஷித:, ஸகலஶப்³தா³நாமர்த²மவக³ம்ய ஸ்வயமபி

இது பாம்பு' என்று 'தாய்' 'தகப்பன்' என்பவை முதலிய சப்தங்களைக்கொண்டு விரலால் சுட்டிச் சுட்டிக் காட்டிப் பல தடவை சிக்ஷிக்கப்பெற்று, பிறகு அந்தந்தச் சப்தங்களாலேயே அந்தந்த அர்த்தங்களில் தமக்கு ஜ்ஞாநம் ஜநிப்பதையும் பார்த்து, 'அந்தந்த வஸ்துக்களில் அந்தந்தச் சப்தங்கள் விரலால் சுட்டிச் சுட்டிப் ப்ரயோகம் செய்யப்படுவதே அந்தந்தச் சப்தம் அந்தந்த அர்த்தத்தைப் போதிப்பதற்குக் காரணம் ஆகின்றதே தவிர, வேறு ஸம்பந்தம் இருப்பதாவது இந்த ஸங்கேதத்தை ஏற்பாடு செய்த புருஷனுடைய ஜ்ஞாநமாவது அதில் காரணமாகமாட்டாது' என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக நிச்சயமாக அறிந்து, மறுபடியும், 'இந்தச் சப்தத்திற்கு இது பொருள்' என்று பெரியோர்களால் சிக்ஷிக்கப்பெற்றவர்களாய், ஸகல சப்தங்களுக்கும் அர்த்த ஜ்ஞாநத்தைப் பெற்று, தாமும், சப்தங்க ளடங்கியுள்ள ஸகல வாக்யங்களை ப்ரயோகம்

றும் வேத வாக்யங்களின் விபாகங்கள். 'இதைச் செய்தல் வேண்டும்' என்று விதிக்கும் வாக்யங்களை விதிகள் என்றும், 'இதைச் செய்தால் இந்த ப்ரயோஜநம் கிடைக்கும்' என்று கர்மங்களை ஸ்தோத்ரம் செய்யும் வாக்யங்களை அர்த்த வாதங்கள் என்றும், அநுஷ்டிக்கப்பட வேண்டிய விஷயங்களை ப்ரகாசித்துக் காட்டும் வாக்யங்களை மந்த்ரங்கள் என்றும் சொல்வார்கள். 'இந்த மூன்று பாகங்களிலும் கார்யத்தைக் குறிக்கும் சப்தங்களுக்கு மாத்ரமே ஸ்வத: ப்ராமாண்ய முண்டு; மற்றை வாக்யங்களுக்கு ஸ்வத: ப்ராமாண்யமில்லை' என்பது எதிர் வாதிகளின் அபிப்ராயம்.

வ்யவஹாராநுகு³ண்யாத்— 'வ்யவஹாரம்' என்பதற்கு 'ப்ரவ்ருத்தி' என்பது பொருள். அது வாசிகமாகவும் காயிகமாகவும் இருக்கலாம். 'பசுவைக் கொண்டு வா' என்று ஒருவன் சொன்னவுடன், அந்த வார்த்தையைக் கேட்டு அதை அறிந்த மற்றொருவனால் அதற்கு இணங்கிச் செய்யப்படும் வ்யாபாரமே இவ்விடத்தில் 'வ்யவஹாரம்' என்பதால் குறிக்கப்படுகின்றது.

ஸித்³தே⁴ வஸ்துநி—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள வ்யவஹாரத்தால் ஏற்படாமல், ஸ்வயமே ஸித்தமாக இருக்கும் வஸ்து தான் 'ஸித்³த⁴ வஸ்து' வென்றும் 'ஸித்³த⁴வஸ்து' வென்றும் சொல்லப்படுகின்றது. அதற்கு உதாஹரணம் 'ஆத்மா' 'ப்ரஹ்மம்'.

கேசித்... இது யாத்ருச்சிகமாக ஏற்படும் வ்யுத்பத்திகள் ஸித்தார்த்த விஷயமாக இருக்கக் கூடுமென்பதைக் காட்டுகின்றது. தத²ா பா³ல:... இது புத்தி பூர்வகமாக ஏற்படும் வ்யுத்பத்திகள் ஸித்தார்த்த விஷயமாக இருக்கக்கூடும் என்பதைக் காட்டுகின்றது.

ஸர்வவாக்யஜாதம் ப்ரயுங்க்தே । அத ஏவ ஸர்வபதாநாம் ஸ்வார்த்தாபிதாயித்வம் ஸங்காதவிசேஷாணாம் யதாவஸ்திதஸம்ஸர்க்கவிசேஷவாசித்வம் ச ஜாநாதீதி கார்யார்த்த ஏவ வ்யுத்பத்திரித்யாதி நிர்பந்தோ நிர்நிபந்தந: । அத: பரிநிஷ்பந்நே வஸ்துநி சப்தஸ்ய போதகத்வசக்த்யவதாரணாத் ஸர்வாணி வேதாந்தவாக்யாநி ஸகலஜகத்காரணம் ஸர்வகல்யாணகுணாகரமுக்தலக்ஷணம் ப்ரஹ்ம போதயந்த்யேவ.

செய்கிறார்கள். ஸகல பதங்களும் இவ்விதமே தம் தம் பொருளைச் சொல்லுகின்றன வென்பதையும், அநேக பதங்களடங்கிய வாக்யங்களில், கார்யத்தின் வழியாகப் பொருளைப் போதிப்பிக்கும் வாக்யங்கள் இருப்பனபோல, ஸ்வதஸ் ஸித்தமான பொருளைப் போதிப்பிக்கும் வாக்யங்களும் இருக்கின்றன வென்பதையும் எல்லாரும் அறிவார்கள். ஆகையால் வ்யுத்பத்தி யெல்லாம் கார்ய பரங்களே என்று சொல்வது கேவலம் பிடிவாதம் மாத்ரமாகுமே தவிர, யுக்தியுடன்கூடிய வாதமாகமாட்டாது. இப்படி ஸித்தமான வஸ்துவைப் போதிப்பதற்கும் சப்தங்களுக்குச் சக்தி உண்டு என்பது ஏற்படுகிறபடியால், வேதாந்த வாக்யங்கள் ஸகல ஜகத்துக்கும் காரணமாயும், ஸர்வ கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாயும் கீழ்க் கூறப்பட்டுள்ள மற்றை லக்ஷணங்களுடன் கூடியதாயுமுள்ள ப்ரஹ்மத்தைப் போதிப்பிக்கின்றன வென்பது ஸித்தம்.

ஸம்பந்தஜ்ஞாநஸாதநாத் ஸங்கேதயித்ருவர்ஷஜ்ஞாநாத்...... அந்தந்தச் சப்தத்தின் ப்ரயோகத்தில் அந்தந்த அர்த்தத்தின் ஜ்ஞாநம் உண்டாவதற்குக் காரணம் முழுவதும், அந்தந்த அர்த்தத்தில் அந்தந்தச் சப்தத்தைத் திரும்பத் திரும்பக் கை விரலால் சுட்டிச் சுட்டிக் காட்டிப் பல தடவை ப்ரயோகம் செய்வதே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை இந்தப் பதங்கள் விளக்குகின்றன. ‘இந்த அர்த்தம் போத்யம், அதை இந்தச் சப்தம் போதிக்கின்றது’ என்பதான போத்ய போதக ஸம்பந்தத்தைத் தவிர்த்து, அந்தச் சப்தத்திற்கும் அந்த அர்த்தத்திற்கும் வேறு எவ்வித ஸம்பந்தமும் இல்லை என்பது தான் தாத்பர்யம். ‘இந்தச் சப்தத்திற்கு இது அர்த்தம்’ என்று ஸங்கேதம் செய்தவனுடைய ஜ்ஞாநமும் இல்லை.

ஸ்வயமபி ப்ரயுங்க்தே—தானும் ப்ரயோகம் செய்கிறான். இதைச் சொல்வதன் கருத்து என்னவென்றால்—இந்தக் குழந்தைகளுக்கு இந்த அர்த்தங்களைச் சொல்லிக் கொடுக்கும் புருஷனும் இம்மாதிரியே ஸித்தார்த்தத்தில் வ்யுத்பத்தியோடு கூடினவனே தவிர, கார்யார்த்தத்தில் வ்யுத்பத்தியைப் பெற்றவனன்று என்பதைக் காட்டுவதற்கே. இந்தப் பாலர்கள் ஸித்தார்த்தத்தில் வ்யுத்பத்தி உடையவர்களாய்ச் சப்தங்களை ப்ரயோகிக்கின்றார்கள் என்று சொன்னால், இப்பொழுது சப்தங்களை ப்ரயோகிப்பவர்களும் அம்மாதிரியே வ்யுத்பத்தியைப் பெற்றிருக்கக்கூடும் என்று நினைக்க இடமுண்டன்றோ?

அத ஏவ ஸர்வபதாநாம் ... ‘எல்லாப் பதங்களும்’ என்பதால், ‘வேதத்தில் தென்படும் பதங்கள் மாத்ரமின்றிக்கே லோகத்தில் தென்படும் பதங்களும் கூட’ என்பது குறிக்கப்படுகின்றது.

ஸ்ரீ:

நவனீதம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி முத்திரிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத்தின்கண் உள்ள வேதசாஸ்திர பாரங்தர்களான பண்டித சிரேஷ்டர் பலராலும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அநேகராலும், பலபடியாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ஒருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்று தொட்டு பிரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், பௌத்தம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங்களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அருளப்பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பலவற்றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனாகப் பக்ஷபாதமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களை யெல்லாம் இருபாலாரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத்தைக் கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத்தினரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்றனர். சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட்டில் இதுகாறும் உண்டாகியதே யில்லை யென்று கெட்டியாகக் கூறிவிடலாம். இத்தகைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. புத்தகம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸு ஸுமார் 400 பக்கங்கள் கொண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து நேர்த்தியாகக் காலிகோ பயிண்டு செய்து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ. 3 தான். வேண்டியவர்கள் " ரா. வரதாசார்யர். B. A., L. T., ஸ்ரீ ஸத்வித்யா புத்தகசாலை மானேஜர், 1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ் " என்ற விலாசத்திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Registered No. M. 2941.

"வைதிக மத தீபிகை"

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை.
வருஷச் சந்தா: ரூ 3.
தனிப் பிரதி: அணா 5.

குறிப்பு

தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாம் "ஸம்பாதகர், வைதிக மத தீபிகை, கோட்னீஸ் கார்டென்ஸ், மாம்பலம், சென்னை' என்ற விலாஸத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ: வாஸுதேவாசார்யர்.

ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:—தேவநாகர எழுத்தில் சுமார் 10,000 பதங்களும் தமிழ் அர்த்தங்களுக்கு அநேக இடங்களில் பகவத்கீதை, உபநிஷத்துக்கள், ஸந்தியா புருஷஸூக்தங்களிலிருந்து உதாரணங்களுடன்	2—8—0
ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:— ஷை நூல் கிரந்தத்தின் மிக விரிவாய் உள்ளது. காலக்ஷேபம் செய்பவர்களுக்காக தர்க்கவியாகரண, உதாரணங்களுடன்	5—0—0
மோக்ஷவழி:—பிரஸ்தானத்ரயம், தமிழ்வேதப் பிரமாணத்துடன்	1—0—0
தசோபநிஷத் தமிழ் மொழி பெயர்ப்பு (அச்சில்)	1—8—0

விலாஸம்:—

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்.
பிரம்ம ஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்

க்ஷேமம் கிராமம். குத்தம்பாக்கம் போஸ்ட், வயா பூந்தமல்லி, செங்கற்பட்டு ஜில்லா. புஸ்தகங்கள் சைதாப்பேட்டை ஸத்வித்யா டிபோ மானேஜரிடமும் கிடைக்கும்.

Printed by K. R. Press, and published by R. Varadachariar,
Secretary, Sri Sadvidya Sabha, Saidapet, Madras.